ஜுவல் லேண்ட் ஜுவலரி
வழங்கும்
அரியதோர் சந்தர்ப்பம்
உங்களுக்குப் பிடித்தமான தங்க நகைகளை வாங்கி மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தலாம். முழு விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்.
ஜுவல் லேண்ட் (பிரைவேட்) லிமிட்.
447, மருதானை ரோட், கொழும்பு-10
தொலைபேசி- 699326 — 685910

செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6562 1990 ஏப்ரல் 11 புதன்கிழமை ★ ★ ★ தினபதி

அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
இன்றே விஜயம் செய்யுங்கள்
JEWEL LAND (Pvt) LTD.
No 447 Maradana Road, Colombo 10.
DEALERS IN JEWELLERY
தொலைபேசி- 699326 — 685910

# யாழ் குடாநாடு முழுவதும்

# மின்சார தட்டுப்பாடு ஏற்படும்

# — அபாயம் —

## பல மின்மாற்றிகள் பழுது

### திருத்துவதற்குப் பணம் இல்லை

### உள்ளூராட்சி சபைகள் ரூ. 1 29 கோடி செலுத்தவேண்டும்

— கே அரசரத்தினம் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

**யாழ். குடாநாடு முழுவதிலும் மின் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. காரணம் பல டிரான்ஸ் போமர்கள், அதாவது மின் மாற்றிகள் பழுதடைந்து போயுள்ளன. அவற்றைத் திருத்தப் பணம் இல்லை. உள்ளூராட்சி சபைகள் 129 கோடியே 2 லட்சம் ரூபா செலுத்த வேண்டும்.**

இந்தத் தகவலை மின்சார சபையின் யாழ் அத்தியட்சகர் திரு வி கந்தசாமி தினபதிக்குத் தெரிவித்தார்.

யாழ் குடா நாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகள் தாம் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தைத் தாமதமின்றிச் செலுத்த முன்வரா விட்டால் செய்ய முடியாமல் போய்விடும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை மற்றும் நகர சபைகள், பட்டின சபைகள், பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி சபைகளே மின் கட்டணத்தைச் செலுத்தாமல் இருக்கின்றன.

யாழ் மாநகர சபை 48 கோடி ரூபா- 21 மாதங்களுக்குரிய கட்டணம் இதுவாகும்.

பருத்தித்துறை நகர சபை 37 மாதங்களுக்கு 6 கோடி ரூபா-

(2ஆம் பக்கம் பார்க்க)



பொலீஸார் நேற்று கோட்டையில் கண்டு பிடித்தனர். அதனை அவர்கள் பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படம். (ண)
வைத்த பெருமளவு கள்ளச் சாராயத்தைக்

## 9ஆவது மாடியில் இருந்துவிழுந்தும் சிறுவன்தப்பினான்

வெகூல், ஏப் 10

30 மாத பாலகன் ஒருவன் 9ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்தான்- ஆயினும் தப்பிப் பிழைத்தான்-

வியப்பூட்டும் இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிரெஞ்சு நகரமான செகூலில் நிகழ்ந்தது-

பாலகனுக்கு உரசல் காயங்கள் மட்டுமே ஏற்பட்டிருந்தன- ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பாலகன் இரு மணி நேரத்தில் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்-

மாடிக் கட்டிடத்திற்கு கீழே யிருந்த வீடமைப்புத் தொகுதியின் மரக் கிளைகளினால் பாலகனின் விழுந்த விசை குறைந்து விட்டது என்றும் சில மரக்கிளைகள் மட்டுமே முறிந்தன என்றும் தீயணைப்புப் படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்- (ண-ரி)

## அன்னை பூபதி நினைவு உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப் 9

அன்னை பூபதி நினைவாக நேற்றுக் காலை யாழ் நல்லூரில் சுழற்சி முறையில் அடையாள உண்ணா விரதம் நடத்தப்பட்டது-

உண்ணாவிரதம் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 4-30 மணி வரை நடைபெற்றது அதில் ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டார்கள்-

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த உண்ணா விரதத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்- (ண-120).

## கிராம சேவகர் அடித்துக் கொலை

கொழும்பு ஏப் 10

இனம் தெரியாத நபர்கள் வீட்டில் தனியாக இருந்த கிராம சேவகர் ஒருவரை

## பேணிக்களினால்

## கோட்டை ரயில் நிலையம்

### முன்பாக கள்ளச்சாராய வடிசாலை

கொழும்பு ஏப் 10

கோட்டை ரயில் நிலையத்

பண்டகசாலையில் இயங்கி வந்த கள்ளச்சாராய வடிசாலை

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்

செலுத்த வேண்டிய மின் கட்ட ணத்தைத் தாமதமின்றிச் செலுத்த முன்வரா விட்டால் மின்சார சபையால் எதுவுமே

ராட்சி சபைகளே மின் கட்டணத் தைச் செலுத்தாமல் இருக்கின் றன-

விவரம வருமாறு—

## வெளிநாடு செல்லும் அதிகாரிகள்

# 10 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

கொழும்பு ஏப் 10

வெளிநாடுகளுக்கு செல்லும் அதிகாரிகள் தமது விஜயம குறித்து 10 தினங்களுக்குள் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும-

கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இவ் வாற தமது உயர் அதிகாரி களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்—

கல்வி அமைச்சின் உயர் அதி காரிகள் வெளிநாட்டு பயணங் களை மேற்கொள்ளத் தகுதி இல்லாதவர்களாக இருக்கும பட்சத்தில் கல்லூரி அதிபர் களைத் தெரிவு செய்து அனுப்பும படி அமைச்சர் தனது உத்தரவில் தெரிவித்திருக்கிறார்— (ண—மு)

## தேனீக்களினால் ஏற்பட்ட விபத்தில் பெண் மரணம்

சான் சல்வடோர், ஏப் 10

தேனீக்கள் படையெடுத் தன- இதனால் பீதியுற்ற வாக னச் சாரதியின் கவனம திசை மாறியது- வாகனம முட்டி மோதி விபத்துக்குள்ளானது- இந்த விபத்தில் பெண் ஒரு வர் மரணமானார்- எட்டுப் பேர் காயமுற்றார்கள்-

இந்த சமபவம கடந்த திங கட்கிழமை சல்வடோரில் நிகழ்ந் தது- (ண—சி)

இனம் தெரியாத நபர்கள் வீட்டில் தனியாக இருந்த கிராம சேவகர் ஒருவரை அடித்துக் கொன்றார்கள்- பின்னர் அவர்கள் கிராம சேவ கரின் சடலத்தை கிணற்றில் போட்டு விட்டு தப்பிச் சென் றார்கள்-

(2ஆம பக்கம பார்க்க)

## சோமண்ணை



கையிருப்பில வைக்கிறதை பெருச்சாளிகளிண்ட கை எட்டா மலும பார்த்துக் கொள்ள வேணும பாருங்கோ-

கொழும்பு ஏப் 10

கோட்டை ரயில் நிலையத் துக்கு எதிர்ப்புறமாக அமைந் திருக்கும சார்மர்ஸ் அரச பண்டகசாலையில் இயங்கி வந்த கள்ளச்சாராய வடி சாலை ஒன்றைப் பொலீஸார் நேற்று முற்றுகையிட்டனர்.

இது தொடர்பாக சந்தேகத் தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மதுவகைகளைத் திருட்டுத் தனமாக போத்தலில் அடைத்து விற்று வந்த இவ்வடிசாலை கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வந்திருக்க வேண்டும என்று அபிப்பிராயம் தெரிவிக்கின்ற னர்.

பொலீஸார் அதனை முற்று கையிட்ட போது மது நிரப்பப் பட்ட ஆயிரத்து 900 போத்தல் களும, ஆயிரக் கணக்கான வெற் றுப் போத்தல்களும சுமார் பத் தாயிரம லேபிள்களும அங்கி ருந்து கைப்பற்றப்பட்டன.

கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் கள்ளச்சாராயத்தை ஏற் றிச் சென்ற லொறி ஒன்று மடக் கப்பட்டதையடுத்தே பொலீ ஸார் மேற்படி கள்ளச்சாராய

(2ஆம பக்கம பார்க்க)

## வடக்கு கிழக்கில்

# சட்டம் ஒழுங்கு நிலைமையில் பெரும் அபிவிருத்தி என்று அதிகாரிகள், புலிகள் திருப்தி

கொழும்பு, ஏப். 10

வடக்கு கிழக்கில் சட்டம ஒழுங்கு நிலைமையில் இப் போது பெரும அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று முப் படை மற்றும பொலீஸ் அதி காரிகளும புலிகளும திருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

நேற்றுக் காலை வடக்கு கிழக்கு சமாதானக் குழுத் தலை வரான அமைச்சர் ஏ சி எஸ் ஹமீது அதிகாரிகளையும புலி களையும ஒருங்கே சந்தித்துப் பேசினார். அப்போதே இரு சாராரும வடக்கு கிழக்கு சட் டம ஒழுங்கு நிலைமை குறித்த திருப்தி தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் இப்போது மக்கள் எதுவித தடையும இடையூறுமின்றி தங்கள் நாளா ந்த அலுவல்களைக் கவனித்து வருகிறார்கள். அங்கே நிலைமை வழமைக்குத் திருமபிக் கொண் டிருக்கிறது என்றும இரு சாரா

(2ஆம பக்கம பார்க்க)

# 3 மாத உணவுப் பொருள் கையிருப்பில் இருக்கும்

கொழும்பு ஏப் 10

எந்த ஒரு நிலைமையையும சமாளிக்கும விதத்தில் 3 மாத த்திற்கு தேவையான உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும-

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லி மாராச்சி இப்படி உத்தரவிட்டி ருக்கிறார்-

விசேஷமாக அரிசி, மா போன்றவற்றை அரசாங்க பண் டக சாலைகளில் சேமித்து வைக்க வேண்டும என்று அமைச் சர் உணவுத் திணைக்களத்தை கேட்டிருக்கிறார்-

இயற்கை அனர்த்தங்கள், கப் பல் வருகை தாமதமாகல் ஆகிய னவற்றின் போது உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கக் கூடாது என அமைச்சர் திரு வீரசிங்க மல் லிமாராச்சி சமபந்தப்பட்ட சகல அதிகாரிகளையும பணித் திருக்கிறார்- (ண—மு)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4-30 |
| சுபஹு | 4-45 |
| சூரிய உதயம | 6-05 |
| லுஹர் | 12-20 |
| அஸர் | 3-16 |
| மஃரிப் | 6-20 |
| இஷா | 7-40 |

# ஆஸி. பல்கலைக் கழகம் புலமைப் பரிசில் திட்டம்

கொழும்பு ஏப் 10

ஆஸ்திரேலியாவில் பல்கலைக் கழக படிப்பை மேற்கொள்ள வசதியளிக்கும வகையில் புல மைப் பரிசில் திட்டம ஒன்றை அந்நாட்டு தூதரகம அறி வித்துள்ளது-

தகுதி பெற்ற 23 மாணவர்கள் இப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 1991 ஆண்டு தொடக்கம ஆஸ்திரேலிய பல்கலைக்கழகங்க ளில் படிப்பை ஆரமபிக்க முடியும

இரு வேறு அடிப்படைகளின் கீழ் மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்க ஆஸ்திரே லிய தூதரகம முன்வந்துள்ளது-

இதன் கீழ் க பொ த உயர்தர வகுப்புக்கான பரீட்சையில் ஒரே தடவையில் 4 "பி" தகைமையைப்

(2ஆம பக்கம பார்க்க)

# கொத்தணி முறை உடனடி ரத்து

## ரஞ்சன் உறுதி

கொழும்பு ஏப் 10

பெருந் தோட்டத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொத் தணி முறை உடனடியாக ரத்து செய்யப்படும.

கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல் லச்சாமியிடம பெருந்தோட்டத் துறை அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு உறுதி அளித்துள்ளார்

திரு செல்லச்சாமி நேற்றுக் காலை அமைச்சர் ரஞ்சன் விஜே ரத்னவை அவரது அமைச்சில் சந்

(2ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

ஏக்கருக்கு 125 புசல் விளைச்சல் தரும்

# புதிய ரக நெல் கண்டுபிடிப்பு

அக்குறணை, ஏப். 9

இலங்கையின் சகல பகுதியிலும் பயிரிட்டு அதிக பலன் பெறக் கூடிய புதிய ரக நெல்லினம் ஒன்றை பத்தலகொட விவசாய ஆராய்ச்சி நிலையம அண்மைக் கால ஆய்வுகள் மூலம கண்டுபிடித்துள்ளது.

பீ சி 787 எனப் பெயரிடப்பட்டுள்ள இப்புதிய நெல்லினம செம்மை நிற அரிசியை தரக் கூடியது.

இலங்கையின் சகல பகுதிகளிலும் காணப்படும சுவாத்திய நிலைகளுக்கு ஒத்துக் கொடுக்க கூடியது.

இப்புதிய நெல்லினம ஒரு ஏக்கருக்கு 125 புசல் நெல்லை மூன்று மாதத்தில் விளைச்சலாக தரக் கூடியது.

அடுத்த போகத்தில் விவசாயிகளுக்கு இந்த இன நெல் விளைச்சலுக்காக விநியோகிக்கப்பட உள்ளது.

மூன்று இன நெல் வகைகளை ஒன்றுபடுத்தி செய்யப்பட்ட ஆய்வுகளின் பயனாக இந்த புது ரக நெல் வர்க்கம கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ந—411)

## இஸ்ரவேல் நலன் காப்பு பிரிவை மூடுவதால் அரபு நாடுகளுடன் உறவு வளரும்

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

கொழும்பு, ஏப். 10

இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவு மூடப்படுவதன் மூலம அரபு நாடுகள் - இலங்கை உறவு மேலும வளரும.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சரும, களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு கூறினார்.

பேருவளை நகர எழுச்சி பிரதேச கமஉதாவ விவசாய வாரத்தை ஆரமபித்து வைத்து உரையாற்றும போதே அமைச்சர் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் பேசும போது மேலும கூறியதாவது:-

இந்தியப் படை இந்நாட்டை விட்டு முற்றாக வெளியேறி விட்டது.

இது ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று.

அதே போல் ஜனாதிபதி தேர்தலின் போது வரலாற்றுப் புகழ் மிகு பேருவளை நகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் வெளிநாட்டுச் சக்திகளை நாட்டிலிருந்து நிச்சயம வெளியேற்றுவேன் என ஜனாதிபதி வாக்குறுதியளித்தார்.

... நகரவும, மஹபொலவின் தந்தை திரு லலித் அத்துலத் முதலியும களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே.

அதே போல் ஜனாதிபதியின் தாயும களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவரே.

இதனால் இந்த மாவட்டம பெரும கீர்த்தியைப் பெறுகிறது.

நாம இன்று இந்த நிலைக்கு வரக் காரணம இலவசக் கல்வியே.

அதற்காக பணம செலவழித்தவர்கள் மக்களே.

அந்த மக்களின் பணத்தால் இந்த நிலைக்கு வந்த நாம மக்களுக்கு சேவை செய்ய வேண்டியது எமது கட்டாயக் கடமை.

அரசாங்க ஊழியர்கள் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும.

தமது தொழிலை சமூக சேவையாகக் கருதி செயல்பட்டு தமக்காக தமது கல்விக்காக செலவு செய்த மக்களுக்கு சேவை செய்ய வேண்டும.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

வேறு பலரும இங்கு உரையாற்றினர். (ந—007)

வடக்கு கிழக்கு மா. சபை வழங்கிய

## தகுதியற்ற நியமனங்கள் அனைத்தும் ரத்தாகும்

— நளீன் செனவிரத்ன

கொழும்பு, ஏப் 10

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட தகுதியற்ற நியமனங்கள் யாவும ரத்து செய்யப்படும.

இதற்கான உத்தரவை வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ...

இவை அனைத்தும தகுதி அடிப்படையில் வழங்கப்பட்டவைதானா?

வழங்கப்பட்டவர்கள் தேவையான அடிப்படை தகைமைகளைப் பெற்றுள்ளனரா?

போலி டிக்கெட் அச்சிட்டவர் விடுதலை

கொழும்பு ஏப் 10

கதிர்காமத்தில் பௌத்த வேலி அமைக்கும திட்டத்துக்கு நிதி சேர்க்கவென போலி டிக்கெட்டுகளை அச்சிட்டு விநியோகித்தார் என்ற குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட நபரை கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் சித்ரசிறி விடுதலை செய்தார்.

குருநாகலையைச் சேர்ந்த நிமால் தமகே என்பவரே மேற்படி குற்றச் சாட்டில் இருந்து விடுதலை பெற்றார். (ந—032)

# இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை: உறுதி செய்து கொள்ளல் அவர்களது கடமையாகும்

— செல்லச்சாமி

கொழும்பு, ஏப். 10

வாக்குரிமை நமது பிறப்புரிமை, அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது இந்திய வமசாவளி மக்கள் ஒவ்வொருவரினதும கடமையாகும.

இவ்வாறு இ தொ கா பொதுச் செயலாளரும கைத்தொழில் துறை ராஜாங்க அமைச்சருமான எம எஸ் செல்லச்சாமி அறிக்கை ஒன்றில் கூறி உள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும தெரிவித்திருப்பதாவது—

1989 ஆம ஆண்டின் வாக்காளர் இடாப்பு இப்போது கச்சேரிகள், தபாற் கந்தோர்கள், உள்ளூராட்சி அலுவலகங்கள், தோட்டக் காரியாலயங்கள் ஆகியவற்றில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வமசாவளி மக்கள் அந்த இடாப்புக்களை பார்வையிட்டு தங்கள் பெயர் பட்டியலில் இடம பெற்றிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும.

1988 ஆம ஆண்டின் நாடற்றவர் ஒழிப்புச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகளான இந்திய வமசாவளி மக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்ய 1989 பெப்ரவரியில் விசேட சட்டம ஒன்று கொண்டு வரப்பட்டது.

இச்சட்டத்தின் கீழ் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களும இந்த இடாப்புகளில் பின் இணைப்பாக இடம பெற்றுள்ளன.

வாக்காளர் பட்டியலில் இடம பெறாமல் விடுபட்டவர்களும இவ்வாண்டு 18 வயது அடைந்தவர்களும தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள எதிர் வரும மே மாதம 8 ஆம திகதி வரை விண்ணப்பிக்கலாம.

பட்டியலில் தங்கள் பெயர் தவறாக பதிவு செய்யப்பட்டிருந்தால் அதனைச் சுட்டிக் காட்டி திருத்திக் கொள்ளலாம. இதற்கான விண்ணப்பப் படிவங்களை தேர்தல் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும.

இவ்வாறான விண்ணப்பங்களை தயாரித்துக் கொடுக்கவும அதற்கான வழிமுறைகளைக் கவனிக்கவும இ தொ கா மாநில மாவட்ட அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டம — எம சிவலிங்கம, மொனராகலை மாவட்டம — எம சுப்பையா எம சச்சிதானந்தன், கேகாலை இரத்தினபுரி மாவட்டங்கள் — ஏ எம டி ராஜன், கண்டி, மாத்தளை மாவட்டம — ஏ கதிரேசன், கமபஹ, களுத்துறை மாவட்டம — ஆர் ஆர் இராமதாஸ், கொழும்பு மாவட்டம எஸ் கோவிந்தராஜ்.

வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வது தொடர்பான விவரங்களை பொதுமக்கள் இவர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம என்று அமைச்சர் எம எஸ் செல்லச்சாமி தமது அறிக்கையில் மேலும தெரிவித்துள்ளார். (ந—கு)

கட்சிக்கு எதிரான மனு தொடர்பாக

## முஸ். காங்கிரஸ் பதில் மனு தாக்கல்

கொழும்பு, ஏப் 10

முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் அக்கட்சிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள ரிட் மனுவுக்கு பதிலளிக்கும வகையில் கட்சிப் பொதுச் செயலாளர் எம ஜே சாஹித் நீதிமன்றத்தில் பதில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

மேற்படி ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது, எட்டாவது, பத்தாவது மற்றும பத்தில் இருந்து 19 ஆவது வரையிலான பிரதிவாதிகள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தலைமறைவாகி உள்ளனர். அவர்களது இருப்பிடத்தை கட்சி அறிந்திருக்கவில்லை.

மேலும ஆறாம மற்றும ஒன்பதாம பிரதிவாதிகள் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்படி முஸ்லிம காங்கிரஸ் பொதுச் செயலாளர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ரிட் மனுவை முஸ்லிம காங்கிரஸ் திஹாரிய கிளையைச் சேர்ந்த எம என் தாஜுடீன் தாக்கல் செய்துள்ளார். இம மனுவில் செயலாளர் எம ஜே சாஹித், வடக்கு கிழக்கு மாகாண சபை செயலாளர் மற்றும 19 முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர்கள், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம மனுவுக்கான பதில் ...

நேரடியாக அறிந்திருக்கவில்லை என்று இவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் திஹாரிய கிளையின் உறுப்பினர் அல்ல. மேலும அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கட்சியால் நியமிக்கப்பட்டனர். இதனால் மனுதாரர் அம்பாறை மாவட்டத்துக்கு நியமனம பெற்றிருக்க முடியாது.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்டது. இப் பட்டியலில் காணப்படும எம என் தாஜுடீன் என்பவர் மனுதாரர் அல்லர்.

இப்படி இம மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு கொலை செய்யப்பட்ட இரு உறுப்பினர்களுக்குப் பதிலாக வேறு எவரும இதுவரை நியமனம செய்யப்படவில்லை என்றும குறிப்பிடப்பட்டுள்ளது. [ந—032]

# இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சி தருகின்றன

சமந்தா
(தெமட்டகொடை)
10-30. 2-30. 6-00. 9-00

கொன்கோட்
(தெகிவளை)
10-30. 2-30. 6-00. 9-00

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30. 2-30. 6-30

10 வருஷத்துக்கு முன்பு நடந்தது"ச் சொல்லப்படும ஒரு உண்மைக் கதை

ரஜனிகாந்த் — ராதிகா
ரகுமான் — சித்ரா
பாண்டியன் — மூர்த்தி
நடித்த
சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**
(கலர்)

12 வது வாரம
விடோ
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

விஜயா
(மட்டுநகர்)
2-30, 6-30, 9-30

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

பூ...
பூவா ...

## சட்டம் ஒழுங்கு...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

ரும கூறினர்.

பேச்சுவார்த்தைகள் இரண்டு மணி நேரம நடைபெற்றன. பல் வேறு விஷயங்கள் பேச்சு வார்த்தைகளில் இடம பெற்றன.

... தலைவர்கள் மற்றும பொலீஸ் மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகள் நேற்று இரவு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவைச் சந்தித்துப் பேசினர்.

நேற்று முன்தினம இரவு ...

வேற்றிய ஜனாதிபதி செயல் வீரர்.

முஸ்லிமகளின் உணர்வுகளை மதிக்கும ஜனாதிபதிக்கு முஸ் லிமகள் என்றும ஆதரவு, ஒத்து ழைப்பு வழங்க வேண்டும.

அரசாஙகத்தினதோ மற்றும பொதுப் பணத்தையோ பெறாத பல்கலைக் கழக மாணவர் களுக்கு மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக் கொடுத்தவர் அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

இதுவரை 21,000 பேருக்கு மஹபொல புலமைப் பரிசில் கொடுக்கப்பட்டுள்ளது.

இலவசக் கல்வியின் தந்தை திரு ஸி டபிள்யூ டபிள்யூ கன்

## பெயர் மாற்றமும் மத, மாற்றமும்

வத்தளை. ஹெந்தளை, மடம ரோட், 84/7 ஆம இலக்க இல்லத் தில் வசிக்கும பெட்ரிக் பெர் னாண்டு நீதா பிரியந்தி ஆகிய நான் எனது பெயரை பாத்திமா பாரிசா என மாற்றி இஸ்லாம மதத்தைத் தழுவிக் கொண்டேன் எனவும அவ்வாறே இன்று முதல் எனது பெயரை பாத்திமா பாரிசா என்றே சகல ஆவணஙகளிலும் கையொப்ப. இடுவேன் எனவும இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும பொது மக்களுக் கும அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு
(ஒப்பம)
பாத்திமா பாரிசா
030427

லெபடினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன பிறப்பித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண பிர தம செயலாளர் திரு கணேச நாதன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட பின் பல் வேறு துறைகளில் புதிய நியம னஙகள் வழஙகப்பட்டுள்ளன.

## யாழ். குடாநாடு...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)
பக்கதம்தொடர்ச்சி ...

வல்வெட்டித்துறை நகர சபை 75 மாதஙகளுக்கு 9 கோடி ரூபா.

நெல்லியடி நகர சபை 53 மாதஙகளுக்கு 10 கோடி ரூபா.

கோப்பாய் பிரதேச சபை 34 மாதஙகளுக்கு 5 கோடியே 4 லட்சம ரூபா.

தொக்குவில் பிரதேச சபை 43 மாதஙகளுக்கு 13 கோடி ரூபா.

நல்லூர் பிரதேச சபை 25 மாதஙகளுக்கு 4 கோடியே 8 லட் சம ரூபா.

காஙகேசன்துறை நகர சபை 49 மாதஙகளுக்கு 9 கோடி ரூபா.

ஏனைய பிரதேச சபைகள் 25 கோடி ரூபா.

இந்த மின் கட்டண நிலுவை ஒருபுறத்தில் மின்சார சபைக்குப் பெரும பிரச்சினையைத் தோற்று வித்திருக்கிறது. மறுபுறத்தில் திருட்டு வழிகளில் மின்சாரத் தைப் பயனபடுததுவோரின் எண் ணிக்கை அதிகரித்து வருவதும பிரச்சினையை உருவாக்குகிறது என்றார் திரு குந்தசாமி.

இவற்றைத் தவிர்க்க பொது மக்கள் முன்வர வேண்டும. மின் கட்டணப் பாக்கித் தொகைகளை உள்ளூராட்சி சபைகள் செலுத்துவ தற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும என்றும அவர் கேட்டுக் கொண்டார்.

[ண—ந—120]

அரச துறை நியமனஙகள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பின் பற்றப்பட்டுள்ளனவா? போன்ற விவரஙகளைத் திரட்டுமபடி ஆளு நர் பிரதம செயலாளரை பணித் துள்ளார்.

முழு விவரஙகளும திரட்டப் பட்ட பின் தகுதியற்ற நியமனங் கள் யாவும ரத்து செய்யப்படும என்று திரு கணேசநாதன் தெரி வித்தார்.

[ந—ய]

இம மனுவுக்கான பதில் மனுவை தமது சட்டத்தரணி நாளிகா பதமசேனவின் ஊடாக கட்சிப் பொதுச் செயலாளர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார்.

கடந்த டிசமபர் மாதம பத் தாம திகதி நடைபெற்ற முஸ்லிம காஙகிரஸ் தேசிய மாநாட்டி லேயே தான் கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப் பட்டதால் மாகாண சபைத் தேர் தலில் போட்டியிட்ட முஸ்லிம காஙகிரஸ் உறுப்பினர்களை தான்

வேறு விடயஙகள் பேச்சு வார்த் தைகளில் இடம பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக் கள் முன்னணித் தலைவர் திரு கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) பொதுச் செயலா ளர் திரு யோகரத்னம (யோகி) அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிஙகம, கிழக்கு மாகாண அரசியல் அமைப்பா ளர் திரு கரிகாலன், அமபாறை மாவட்ட இராணுவ அமைப்பா ளர் திரு கஸ்ட்ரோ, திருகோண மலை மாவட்ட இராணுவ அமைப்பாளர் திரு ரூபன் ஆகி யோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

அரசாஙகத் தரப்பில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜென ரல் நளின் செனவிரத்ன, பாது காப்பு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுஙக, முப்படைத்

சந்தித்துப் பேசினர்.

நேற்று முன்தினம இரவு அவர்கள் தனியாக அமைச்சர் ஹமீதுடன் பேசினர். (உ)

## கோட்டை....

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

வடிசாலையை முற்றுகையிட்ட னர்.

லொறி ஆட்டுப்பட்டித் தெரு வைச் சேர்ந்த ஒரு கடைக்குச் சொந்தமானதாகும. அக்கடை யில் கிடைத்த தகவல்களின் பேரிலேயே கள்ளச் சாராய வடிசாலையைப் பொலீஸார் முற்றுகையிட்டனர்.

பொலீஸார் கைப்பற்றிய லொறியில் 180 கலன் எதையில் மதசாரம இருப்பதும கண்டு பிடிக்கப்பட்டது. பொலீஸார் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

(ண—032)

## ஆவி. பல்கலை...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

பெற்றவர்களும அல்லது 260 புள்ளிகளைப் பெற்றவர்களும அல்லது இத்தகைமைக்கு ஒப் பான பரீட்சையில் சித்தி பெற்ற வர்களும புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும.

உயர் தகைமை கொண்ட மாணவர்கள் புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்படும அதே சம யம திருப்தியளிக்கக்கூடிய தகைமை கொண்ட ஏழைக் குடுமப மாணவர்களும பொரு ளாதார அடிப் படையில் பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளப்படு வர்.

இப்புலமைப் பரிசில் திட்டம் பெண்களுக்கு 50 சதவீதம், ஆண்களுக்கு 50 சதவீதம என பகிர்ந்தளிக்கப்படும.

தகுதி வாய்ந்த மாணவர்கள் தகைமைச் சான்றிதழ்கள், குடுமப வருமானம, ஜனசக்தி சான்றிதழ் - உணவு முத்திரைக் கான சான்று ஆகியவற்றுடன் தமது விண்ணப்பஙகளை எதிர் வரும 30ஆம திகதிக்கு முன்னர் கல்வி அதிகாரி. ஆஸ்திரேலிய தூதரகம், அல்பர்ட் கிறசன்ட்

கொழுமபு-7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும என்று தூதரகம கேட்டுள்ளது.

(ண—032)

## கொத்தணி...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

தொழில் அமைச்சு பேச்சு வார்த்தை நடத்தி னார்.

இச்சந்திப்பின் போது பெருந் தோட்டஙகளை தனியார் மயபபடுததல், தொத்தணி நிர் வாக முறை, தொழிற்பாது காப்பு தொடர்பாக கூட்டு ஒப்பநதம ஆகிய மூன்று விடயங் கள் தொடர்பாக பரிசீலனை செயயபபட்டது.

தோட்டஙகளையும கிராம ஙகளையும இணைத்து கொத் தணி நிர்வாக முறையை அறி முகப்படுத்துவதால பெருந் தோட்டத்துறையில் பாரிய பாதிப்பு ஏறபடும என்பதால் இமமுறையை ரத்து செய்ய வேண்டும என திரு செல்லச் சாமி கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்தே இமமுறை உடனடியாக ரதது செயயப்படும என்று அமைச்சர் உறுதியளித்தார்.

எக்காரணம கொண்டும பெருந்தோட்டஙகள் தனியாரி டம ஒப்படைக்கப்பட மாட்டா.

தொடர்ந்தும மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந் தோட்டக் கூட் டுத்தாபனம ஆகியவற்றின் மூலமே நிர்வகிக்கப்படும.

தோட்டத் தொழிலாளர்க ளின் தொழிற்பாதுகாப்பு, தொழிற்பிணக்குகள், மற்றும வழமையான விசேட கொடுப்பன வுகள் என்பன தொடர்பாக அமைச்சுக்கும பிரதான தொழிற் சஙகஙகளுக்கும இடையில் கூட்டு ஒப்பந்தம ஒன்று விரை வில் கைச்சாத்திடப்படும.

இவ்வாறு இந்தப் பேச்சு வார்த்தையில் இணக்கம காணப் பட்டுள்ளதாக திரு செல்லச் சாமி தினபதிக்குக் கூறினார்.

(ந-ய)

## கிராம சேவகர்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

இச் சமபவம கடந்த திங கள் இரவு கால மாஹிடியே என்ற இடத்தில நிகழ்ந்தது.

ரொபட் விதானாச்சி (வயது 49) என்ற கிராம சேவகரே இவ வாறு கொல்லப்பட்டார்.

இமமரணம தொடர்பாக விசாரணை நடத்திப் பதில் மாஜிஸ்திரேட் திரு டி பண்டார கொலை எனத் தீர்ப்பு வழஙகி னார்.

(ண—மு)


பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

19 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30. 2-30 6-00
சாந்தி
(மட்டுநகர்)
2-30. 6-30. 9-30
நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-15, 9-00
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

20 வது வாரம
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30 2-30. 6-00
கிறாஸ்
(பதுளை)
10-30. 2-30. 6-00
நியூ மெஜெஸ்டிக்
(இரத்தினபுரி)
10-30. 2-30. 6-00. 9-00
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

# ‘புதுப்புது அர்த்தங்கள்’ மூலம் நல்ல நேரம் வந்திருக்கிறது

## நடிகை கீதா கூறுகிறார்

எதற்கும் நேரம் வரவேண்டும். அது இப்போது “புதுப்புது அர்த்தங்கள்” வழியாக வந்துள்ளது.

நடிப்பில் சபாஷ் பெறவேண்டும். தமிழில் முன்னணி நடிகையாக வரவேண்டும். பாலசந்தர் சார் பெயரை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு “வைராக்யத்தோடு இந்தப் படத்தில் நடித்தேன்.

என் நடிப்புக்கு கைமேல் பலன் கிடைத்து விட்டது. இப்போதாவது என்னை திறமையுள்ள ஒரு நடிகை என்று ஏற்றுக் கொண்டார்களே... அதுவரை சந்தோஷம்தான்.

இவ்வாறு கூறினார் நடிகை கீதா.

எமது நிருபரின் கேள்விகளுக்கு பதில் அளித்த போது அவர் மேலும் கூறியதாவது—

கேள்வி- அது சரி... பாலச்சந்தரிடம் இந்தப் படத்தின் வாய்ப்பு எப்படி கிடைத்தது?

கீதா- இப்போது அல்ல... ஏழெட்டு வருடங்களுக்கு முன்பே அவரை எனக்குத் தெரியும். “பைரவி” படத்தில் நடித்த போது அதைப் பார்த்து “நினைத்தாலே இனிக்கும்” படத்தில் முதல்முதலாக சான்ஸ் கொடுத்தார். ரஜனிகாந்த் ஜோடியாக நடித்தேன்.

பாலச்சந்தர் சாருக்கு என் திறமை மீது அபார நம்பிக்கை எப்போதும் உண்டு. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் என்னை கன்னட மொழியில் அறிமுகப்படுத்தி வைத்தவரும் பாலச்சந்தர் சார்தான்.

தமிழில் வெற்றி பெற்ற “இரு கோடுகள்” படத்தை “இரடு ரேக்கைகள்” என்ற பெயரில் கன்னடத்தில் எடுத்தார். தமிழில் ஜெயந்தி செய்த வேடத்தைக் கொடுத்து கன்னடத்தில் அறிமுகப்படுத்தி வைத்தார். படம் சூப்பர் வெற்றி.

அந்த ஒரு படத்தின் வெற்றி எனக்கு 15 கன்னடப் படங்களை தேடித்தந்தது. கன்னடத்தில் இன்றும் முன்னணியில் இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் அவர்தான்.

இதனால் ஒவ்வொரு தீபாவளி அன்றும் நான் அவர் வீட்டுக்குச் சென்று வணக்கம் கூறி ஆசி பெறுவது வழக்கம். அவர் படம் தருகிறாரோ இல்லையோ, ஆனால் ஒவ்வொரு தீபாவளிக்கும் சென்று விடு



சீதா

அதைப்பற்றி நான் கவலைப்படவும் இல்லை. எனக்கு பணத்தை விட பெயரும் புகழும்தான் முக்கியம்.

**புதிய படங்கள்**

கேள்வி- இந்தப் படத்திற்குப் பிறகு புதிய படங்கள் ஏதும் வந்துள்ளதா?

பதில்- நிறைய வந்த வண்ணம் இருக்கிறது. இதுவரை என் பக்கம் திரும்பிக்கூட பார்க்காத பெரிய பெரிய பட நிறுவனங்களில் இருந்துகூட அழைப்பு வந்துள்ளது.

எனக்கு ஏற்ற கேரக்டர்களை தேர்வு செய்து நடிப்பதில் நான் ஈடுபட்டு இருக்கிறேன். 4 படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டு இருக்கிறேன். “உறுதிமொழி”, “சேலம் விஷ்ணு” ஆகிய படங்களிலும் நடித்து வருகிறேன்.

கேள்வி- தமிழில் நிறையப் படங்கள் வந்தால் மற்ற மொழிப் படங்களில் நடிப்பதை நிறுத்திக்கொள்வீர்களா?

கீதா- நிச்சயமாக. தாய்மொழி தமிழில் நடிக்க வாய்ப்பு வரும்போது, மற்ற மொழிகளில் நடிக்க வேண்டிய அவசியமே ஏற்படாதே. அப்படி இல்லாததால் தானே நானெல்லாம் மற்ற மொழிகளை நோக்கி செல்ல வேண்டி இருக்கிறது.

பொதுவாக குடும்ப பாங்கான வேடங்களில் தமிழில் நடிக்க இப்போது திறமையான நடிகை இல்லை. எல்லோரும் “கிளாமருக்கு” தாவி விட்டார்கள். அந்த இடத்தை என் நடிப்புத் திறமையால் ஈடுகட்டி வெற்றிபெறுவேன்.

புத்தாண்டு எனக்கு புத்துணர்ச்சி தரும் ஆண்டாக அமையப் போகிறது பாருங்களேன்.

இவ்வாறு கீதா கூறினார்.

(நு-10)



“சரி” என்று ஒரு வார்த்தை சொல், ஓடிப் போயிடலாம்” என்று ஊர்வசிக்கு ஆசை காட்டுகிறாரா சந்திரசேகர்.
[படம்- பெண்கள் வீட்டின் கண்கள்]

(நு-10)

## ராமராஜனின் புதிய படம்

இவ்வாண்டு

# மட்டக்களப்பு, கல்முனை தொலைபேசி புனருத்தாரண நிதி ஒதுக்கப்படவில்லை

கொழும்பு, ஏப் 10

மட்டக்களப்பு கல்முனைப் பிரதேசங்களுக்கு இவ்வாண்டில் தொலைபேசி புனருத்தாரண அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

அம்பாறை, பொலன்னறுவை ஆகிய பகுதிகளுக்கு மேற்படி பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை, அம்பாறை, பொலன்னறுவை பிரதேசங்கள் மட்டக்களப்பு பிரதேச பொறியியலாளரின் பிரிவின் கீழ் அடங்கும் பகுதிகளாகும்.

தற்போது கல்முனை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு பரிவர்த்தனை நிலையங்களிலும் புதிய தொலைபேசி இணைப்பை பெற முடியாது பாவனையாளர்கள் அவதியுறுகின்றனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் புதிய இணைப்புக்காக பதிவுக் கட்டணம் செலுத்தி காத்திருக்கின்றனர்.

சூறாவளி புனருத்தாரணத்தின் பின் எதுவித அபிவிருத்திப் பணிகளும் தொலைபேசித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையில் வழங்கப்பட்ட மூன்று லொறிகளில் மட்டக்களப்பு பிரதேசத்திற்கு ஒன்றேனும் வழங்கப்படவில்லை.

தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

(ந-404)

அரசியல் குழுக்கூட்டத்திற்கு வருமாறு

## சந்திரிகாவுக்கு அழைப்பு மக்கள் கட்சி விடுக்கும்

கொழும்பு, ஏப் 10

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அடுத்த அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அக்கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடியது. அந்தக் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு ஒஸி அபேகுணசேகர தலைமை வகித்தார்.

சுமார் ஐந்து மணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே, கட்சியின் தலைவிக்கு அழைப்பு விடுவது என தீர்மானிக்கப்பட்டது என்று கட்சியின் பொதுச் செயலாளர் திரு வை பீ டி. சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, திருமதி சந்திரிகா குமாரணதுங்க, லண்டனில் இருந்து நாடு திரும்பிய பின்னர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள கருத்துக்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் திரு சில்வா மேலும் தெரிவித்தார்.

(ண-வ)

## ஆயுதங்களுக்கு செலவாகும் பணத்தை ஆக்கவழிக்குப் பயன்படுத்துக

### இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

கொழும்பு, ஏப் 10

உலகில் ஆயுதப் போட்டிக்காகச் செலவிடப்படும் பணம் மனிதனின் ஆக்க வழிக்காகப் பயன்பட வேண்டும்.

இவ்வாறு வீடமைப்புத்துறை ராஜாங்க அமைச்சரும் அகில இலங்கை ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் அணியின் பொதுச் செயலாளருமான அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கூறினார்.

பேருவளை நகர எழுச்சி பிரதேச கமஉதாவ விவசாய வாரத்தினை முன்னிட்டு காலவில்கந்த உதாகம கிராமத்தில் நடைபெற்ற இலவச மரக்கன்றுகள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் பேசும் போது கூறியதாவது—

நாம் நவீன விஞ்ஞான யுகத்தில் இன்று வாழ்கிறோம்,

நவீன கண்டு பிடிப்புக்கள், நவீன சிந்தனைகள், திறமை அனைத்தும் மனிதனின் கஷ்டத்துக்கும், நஷ்டத்துக்கும் துன்பத்துக்குமே பயன் படுகின்றன.

இன்றைய உலகில் பெரும்பாலான நாடுகள் வறுமையில் வாடுகின்றன.

இந்த நிலையில் நாம் ஆயுதப் போட்டிக்காகச் செலவிடும் பணத்தை மனிதனின் ஆக்க வழிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

எமது நாட்டின் வறுமையை ஒழித்து நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச தலைமையிலான இன்றைய

நாட்டின்

## பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயிகள் பங்கு அவசியம்

### விவசாய திட்ட அமைச்சர் பண்டா

கொழும்பு ஏப் 9

இந்நாட்டு விவசாயி

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்

களைத் தீர்த்து விவசாயத் துறையை முன்னேற்றுவதே இன்றைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றார்.

கூட்டத்தில் மேல் மாகாண

அவர் படம தருகிறாரோ இல்லையோ, ஆனால் ஒவ்வொரு தீபாவளிக்கும் சென்று விடுவேன்.

வழக்கம போல் கடந்த ஆண்டு தீபாவளிக்கு சென்று அவரிடம ஆசி பெற்றபோது, "என்னமமா எப்படி இருக்கிறாய்" என்று கேட்டார். பிறகு "தமிழில் ஒரு படம உன்னை வைத்து பண்ணலாமனு இருக்கேன். நல்ல ரோல். ஆனால் "கால்ஷீட்" நிறைய தேவைப் படும். உன்னால் கொடுக்க முடியுமா?" என்றார். ஏனென்றால் நான் மற்ற மொழி படங்களில் "பிசி" என்பது அவருக்குத் தெரியும.

எத்தனை மொழிகளில் எத்தனை படஙகள் இருந்தால் என்ன? ஒரு பாலசசந்தர் படத்தில் நடிப்பதற்கு அது சமமாகுமா? உடனேயே ஒப்புக் கொண்டேன்.

அந்தப் படத்தில் நடிப்பதற்காக 2 கன்னடப் படஙகளையும், 1 மலையாளப் படத்தையும உதறித் தள்ளிவிட்டேன்.

## ராமராஜனின் புதிய படம்

## 'ஊரெல்லாம் உன் பாட்டு'

"எஙக ஊரு மாப்பிள்ளை" படத்தை தயாரித்த சுரேஷ் காந்த் அய்யனார் சினி ஆர்ட்ஸ் சார்பில் "ஊரெல்லாம உன் பாட்டு" என்ற பெயரில் புதிய படம தயாரிக்கிறார்.

ராமராஜன் கதாநாயகனாக நடிக்கும இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக 2 புதுமுகஙகள் நடிக்கிறார்கள்.

வினுசக்ரவர்த்தி, கவுண்டமணி, செந்தில், தூர்கா சக்திவேல், காந்திமதி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இளையராஜா இசை அமைக்கிறார்.

திரைக்கதை, வசனம, டைரக்ஷன் பொறுப்புகளை சிராஜ் கவனிக்கிறார்.

இவர், "என்னெப்பெத்த ராசா" படத்தை டைரக்ட் செய்தவர். இப்போது கே பிரபாகரன் தயாரித்து வரும "தஙகத்தின் தஙகம" படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

(ந-10)

தினபதி சினிமா

## ரகுமானுடன் கனகா இணையும் படம்

லலிதாஞ்சலி பைனான்ஸ் "சிதா" என்ற பெயரில் ஒரு படம தயாரிக்கிறது-

இதில் கதாநாயகியாக கனகா நடிக்கிறார்-

ரகுமான் சரண்ராஜ் சரத்குமார் ஜனகராஜ் மனோரமா யுவஸ்ரீ ஸ்ரீவித்யா ஆகியோரும நடிக்கிறார்கள்-

நிஷாந்தி "சாந்தி பிரியா" என்ற பெயர் மாற்றத்துடன் முக்கிய வேடம் ஏற்கிறார்!

ஷோபாவின் கதைக்கு திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்கிறார் எஸ் ஏ சந்திரசேகர்

ஷோபா—ஷீலா இணைந்து தயாரிக்கும இந்தப் படத்திற்கு வித்யாசாகர் இசை அமைக்கிறார்-

புரட்சிகரமான எண்ணஙகளைக் கொண்ட ஒரு புதுமைப் பெண்ணின் கதை இது!

[ல—10]

## "நான் வணங்கும் தாய்க்குலமே"

தமிழ்லேண்ட் பிக்சர்ஸ் பட நிறுவனம சார்பில் "நான் வணஙகும தாய்குலமே" என்ற பெயரில் புதிய படம தயாரிக்கப் படுகிறது.

புனா திரைப்பட கல்லூரி மாணவர் குப்தா ஒளிப்பதிவு செய்ய, திரைக்கதை வசனம எழுதி, தஞ்சை அன்புக்கனி டைரக்ட் செய்கிறார். வைரமுத்து பாடல்களுக்கு சந்திரபோஸ் இசை அமைக்கிறார்.

முன்னணி நட்சத்திரஙகள் நடிக்கும இப்படத்தின் நட்சத்திர தேர்வு வேகமாக நடைபெற்று வருகிறது. (இ-10)

கொழும்பு ஏப் 9

இந்நாட்டு விவசாயிகள் அனைவரும ஒரே அமைப்பின் கீழ் ஐக்கியப்பட்டு பொருளாதாரததைப் பெருக்க உழைக்க வேண்டும. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயிகளின் பஙகு மகத்தானது.

விவசாய அபிவிருத்தி செயற்திட்ட அமைச்சர் திரு விஜேரத்ன பண்டா இவ்வாறு கூறினார்.

பேருவளை நகர எழுச்சிப் பிரதேச கமஉதாவ விவசாய வாரத்தினை முன்னிட்டு பயாகலவேரகல கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கான கருத்தரஙகில் கலந்து கொண்டு உரையாற்றும போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் திரு விஜேரதன பண்டா மேலும பேசும போது கூறியதாவது-

இன்று விவசாயிகளுக்கு என ஒரு அமைப்பு இல்லை.

அவர்கள் அனைவரும ஒரே அமைப்பின் கீழ் ஐக்கியப்பட்டு செயல்படுவார்களேயானால் பொருளாதாரத்தின் முக்கிய சக்தியாக அவர்கள் விளஙகுவது நிச்சயம.

எமது நாடு இன்று விவசாயத் துறையில் முன்னேறியுள்ளது. அத்துடன் விவசாயிகளுக்கு அரசாஙகம ஊக்கமளித்து வருகிறது.

விவசாயிகளின் பிரச்சினை

நோக்கமாகும என்றார்.

கூட்டத்தில் மேல் மாகாண உணவு, கூட்டுறவு கைத்தொழில் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எம யூஸுப் பேருவளை உதவி அரசாஙக அதிபர் திரு பி டபிள்யூ வி திஸாநாயக்க, விவசாய அதிகாரி திரு மகிந்த வீரகோன் உட்பட மற்றும பலரும பேசினர். (ந-007)

ஒழித்து நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச தலைமையிலான இன்றைய அரசாஙகம கடுமையாக உழைத்து வருகிறது.

எனவே ஜனாதிபதியின் திட்டஙகள் வெற்றியடைய நாட்டு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழஙக வேண்டும.

இவ்வாறு அவர் கூறினார்.

(ந-007)

## இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவைமூடுவதற்கு பாராட்டு

கொழும்பு ஏப் 10

இலஙகையில் இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவை மூடிவிடுவதற்கு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச எடுத்த முடிவுக்காக அவருக்குப் பாராட்டும, நன்றியும தெரிவிக்கும ஒரு பிரேரணை அகில இலஙகை முஸ்லிம லீக் வாலிப முன்னணிகளின் குருநாகல் மாவட்ட சமமேளனத்தின் மத்திய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சமமேளனம ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள பாராட்டுச் செய்தியில்,

இஸ்ரவேல் நலன்காக்கும பிரிவைச் இலஙகையில் மூடிவிடுவதற்கு தாஙகள் எடுத்த துணிகரமான முடிவின் மூலம தாஙகள் முஸ்லிம உலகின் நன்மதிப்பைப் பெற்று விட்டீர்கள்.

தஙகளின் செயலுக்காக பாராட்டுவதோடு குருநாகல் மாவட்ட முஸ்லிமகளின் சார்பில் உளப்பூர்வமான நன்றியையும தெரிவித்துக் கொள்கிறோம, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-007)

## ஒரிஸ்ஸாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் சுயமாக வெளியேறலாம்

கொழும்பு, ஏப் 10

ஒரிஸ்ஸாவில் அகதிகளாக இருக்கும இலஙகை தமிழர்கள் தமது சுய விருப்பததுடன் வெளியேறலாம. அதறகான வசதிகளை செய்து கொடுக்குமாறு ஒரிஸ்ஸா அரசு அவர்கள் தஙகி உள்ள அகதி முகாமகளுக்கு அறிவிததுள்ளது.

அதேவேளை இவ்வாறு சுயமாக வெளியேறுபவர்கள் என்ன காரணஙகளுக்காக வெளியேறுகின்றனர் (மொழி, கலாசாரம, பழக்கமற்ற உணவு வகைகள்) என்னும விவரஙகளைப் பதிவு செய்து வைக்குமபடியும ஒரிஸ்ஸா அரசு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இந்த அகதிகளுடன அகதிகளாக தஙகி இருக்கும ஈ பி ஆர் எல் எப் பொதுச் செயலாளர் திரு கே பத்மநாபா, வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர் திரு ஜோர்ஜ் செல்வரட்னம ஆகியோர் சில தினஙகளாக டெலலியில் தஙகி இருந்து இந்த அகதிகளை கோவா, ஆந்திர பிரதேசம அல்லது தமிழ் நாட்டிற்கு அழைத்து புகலிடம வழஙக வேண்டும என கேட்டு வந்தனர். என்பதும குறிப்பிடத்தக்கது.

(ல-ய).

## பாதை புனரமைப்பு

பலாஙகொடை ஏப் 9

பலாஙகொடை தோதல் தொகுதியிலுள்ள "குமாரகம" கிராமத்திற்கு செல்லும போக்குவரத்துப் பாதை நீண்ட காலமாக சீர் செய்யப் படாமையால் இப்பாதை மிகவும மோசமடைந்து காணப் பட்டது-

மேற்படி கிராமத்தில் அதிகமான குடுமபஙகள் வாழ்கின்றன வாகனஙகள் கூட இப்பாதையினால் செல்வது வழக்கம-

மழைக்காலஙகளில் இந்த பாதை மிகவும மோசமடைந்து விடுகின்றது- இது விடயமாக இப் பகுதி மக்கள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு எடுத்துக் காட்டிய தற்கிணஙக தற்போது பலாங கொடை குமாரகம பாதை சிறப்பாக புனரமைப்பு செய்யப் பட்டு வருகின்றது- (ஐ-038)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு—
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல— 1613

சுடர் 18 கதிர் 4457
— 1990 ஏப்ரல் 11 —

## எழுத்தறிவு விகிதாசாரம் குறைவது ஏன்?

இலங்கையில் எழுத்தறிவுள்ளவர்களின் விகிதாசாரம குறைந்து வருகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை ஒன்றின் படி இப்போது இலங்கையில் உள்ளவர்களில் 75 சத வீதமானோர் எழுத்தறிவுள்ளவர்கள்.

ஆனால் முன்னர் 85 சத வீதமானோர் எழுத்தறிவுள்ளவர்களாக இருந்தார்கள்.

பத்து சத வீதம வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது—

மூன்றாம உலக நாடுகளில் எல்லாம நிலைமை வேறாக இருக்கிறது.

அந்த நாடுகளில் எழுத்தறிவுள்ளவர்களின் விகிதாசாரம படிப்படியாக உயர்ந்து வருகிறது.

ஒரு காலத்தில் இலங்கையைப் பார்த்துப் பொறாமைப் பட்ட மூன்றாம உலக நாடுகள் எல்லாம இப்போது இலங்கைக்குச் சவால் விடும விதத்தில் எழுத்தறிவுள்ளவர்களின் விகிதாசாரத்தை அதிகரிப்பதற்கு அர்த்த புஷ்டியான பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இலங்கையில் நிலைமையைச் சீராக்குவதற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி முன் வந்திருக்கிறார்.

பெற்றோர் தமது பிள்ளைகளை 8 ஆம தரம வரை கண்டிப்பாகப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும. தவறும பெற்றோரைத் தண்டிப்பதற்குச் சட்டம கொண்டு வர அமைச்சர் அத்துலத் முதலி உத்தேசித்திருக்கிறார்.

பாடசாலையில் இலவச

# ஏற்றுமதித் தரத்துக்கு அன்னாசிப் பழ செய்கை

## அரசாங்கம் நடவடிக்கை

அன்னாசிப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு வர்த்தக அமைச்சு முன் வந்துள்ளது. இதன் முன்னோடியாக ஏற்றுமதி செய்யக் கூடிய தகுதி வாய்ந்த அன்னாசிப் பழங்களின் உற்பத்தியை அரசு கையேற்கும.

இதற்கென குருநாகல் மாவட்டத்தில் 5000 ஏக்கரை தெரிவு செய்துள்ளது. மேலும கமபஹா, அத்தனகலை பகுதிகளிலும அன்னாசிப்பழ பயிர்ச் செய்கை செயல்படுத்தப்படும.

ஈரம வாய்ந்த மண் அன்னாசிப்பழ பயிர்ச் செய்கைக்கு ஏற்றதாகும.

இலங்கையில் இரண்டு விதமான அன்னாசிப் பழங்கள் உண்டு. ஒன்று "கியூவ்" என்று அழைக்கப்படும. மற்றது "மொரிஷியஸ்" என்றழைக்கப்படும. இவை இரண்டும வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தகுந்தவை அல்ல.

ஆகவே, பிலிப்பைன்ஸ் நாட்டில் வளரும "ஸமூத்சைன்" என்ற அன்னாசிப்பழ இனத்தை இலங்கையில் பயிரிட அரசு திட்டமிட்டுள்ளது.

இப்பழத்திற்கு கனடா, கொரியா போன்ற நாடுகளில் பாரிய சந்தை உண்டு.

அரசு அன்னாசிப்பழ ஏற்றுமதி மூலம 70 லட்சம ரூபா அந்நியச் செலாவணி கிடைக்கும என்று எதிர்பார்த்தது. இவ்வருட அன்னாசிப்பழ உற்பத்தி காலம மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது.

ஆனால், இதுவரையிலும அன்னாசிப்பழ ஏற்றுமதியினால் கிடைக்கப்பட்டிருக்கும அந்நிய செலவாணி 50 லட்சம ரூபாக்களே.

இலங்கையில் உள்ள தென்னந் தோட்டங்களில் அதிகமான தரிசு நிலங்கள் காணப்படுகின்றன. அந்த தரிசு நிலங்களில் உள்ள தென்னை மரத்திற்கு பக்கத்தில் அன்னாசிப் பயிர்ச் செய்கையை செயல்படுத்தலாம என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சியை விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி மன்றம தெரிவித்துள்ளது. இத்திட்டத்தினால் வேலையில்லாப் பிரச்சினையையும ஓரளவு தீர்க்கலாம.

அன்னாசிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கும விவசாயிகளின் கஷ்டங்களையும, தேவைகளையும நேரடியாக அணுக வேண்டும. அவைகளைப் போக்க முயல வேண்டும.

உர மானிய ரத்தினால் விவசாயிகளின் உற்பத்தி குறைந்துள்ளது. இதற்கென ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னாசிப்பழ செய்கை 1975ஆம ஆண்டு 11,000 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 1989ஆம ஆண்டு 9000 ஏக்கர் நிலப் பரப்பிலேயே அன்னாசி பயிரிடப்பட்டது. பெருமளவில் அன்னாசி உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும.

(ம—455)



## பதிவுப் புத்தகம் வழங்கல்

கல்முனை மஹ்மூத் பாளிகா வித்தியாலயத்தில மாணவியர்களுக்கான பதிவுப் புத்தகம வழங்கும திட்டம ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம, வித்தியாலய அதிபரும, கொத்தணி அதிபருமான ஜனாப் ஏ எச் ஏ பசீர் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமபாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு எச் பீ விஜேசூரிய மாணவி ஒருவருக்குப் பதிவுப் புத்தகம வழங்கி, இந்த முன்னோடித் திட்டத்தை ஆரமபித்து வைப்பதைப் படத்தில் காண்க.

[படம— ஏ எல் எம சலீம] (ஐ—217)

## அறநெறி பாடசாலை பேலியகொடை:

கொழும்பு, ஏப. 10

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயத்தில், இப்பகுதியில் வாழும பின் தங்கிய ஏழை இந்துச சிறார்

## அக்குறணையில்

# நீர், மின்சார தடை:

### கேகாலை மாவட்ட

## தமிழ் — முஸ்லிம் மாணவர்களின் கலைத்திறமை போற்றத்தக்கது

### மேலதிக கல்வி அதிபர்

வறக்காப்பொளை ஏப் 9

"மொழி தெரியாதவர்களும தமிழ் விழாக்களில் இடம பெறும நிகழ்ச்சிகளை மனம விட்டு ரசிக்கக் கூடியதாகவுள்ளது. கேகாலை மாவட்ட தமிழ் முஸ்லிம மாணவர்களின் கலைத் துறைத் திறமைகள் மிகவும போற்றத்தக்கதாகவுள்ளன—

இவ்வாறு, சப்ரகமுவ மாகாண மேலதிக கல்வி அதிபர் திரு தயானந்த முதலிகே கூறினார்

கேகாலை மாவட்டத்தில் உள்ள நான்கு கோட்டக் கல்விப் பிரிவுகளுக்குமான தமிழ் தின விழாவின் இறுதி விழா வறக்காப் பொளை பாபுல்ஹஸன் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது—

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்—

தமிழ்த்திறன் போட்டிகளில் இடமபெற்ற நாடகம நடனங்களைக் கண்டுகளித்த பின்னர் தொடர்ந்தும உரையாற்றிய திரு முதலிகே—

கேகாலை மாவட்டப் பாடசாலைகளில் தமிழ் மூலப் பாடசாலைகளுக்குத் தேவையான சங்கீத உபகரணங்கள் இல்லாதிருப்பது ஒரு பெரும குறையாகும—

இக்குறைபாடு நீக்கப்பட்டால் தமிழ் முஸ்லிம மாணவர்கள் மேலும இப்படியான கலைத் துறைகளில் மேமபட்டு விளங்குவார்கள் என்றார்—

இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ—333)

புனித ரமழான்

## செய்தித் திரட்டு

### ஞாயிறு சந்தை

மஸ்கெலியா ஏப் 9

அண்மையில் மஸ்கெலியா பொது விளையாட்டுத் திடலில் ஞாயிற்றுக்கிழமைக்கான சந்தை திறந்து வைக்கப்பட்டது-

இச்சந்தையில் பாவனையாளர்களுக்கான பொருட்கள் மலிவான விலையில் விற்கப்படுகின்றன—

இதனால் பாவனையாளர் குறைந்த விலையில் நிறைந்த பயனைப் பெறுவதால் மக்கள் மகிழ்ச்சியுடன் பொருட்களைக் கொள்வனவு செய்வதைக் அவதானிக்க முடிகின்றது— (ஐ-408)

### தொலைபேசி இணைப்புகள் துண்டிப்பு

கொழும்பு, ஏப். 10

வன்செயல் காரணமாக குருக்கள் மடம, தேற்றாத்திவு உப தபால் நிலையங்களில் இருந்த தொலைபேசி இணைப்புக்களும வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு துண்டிக்கப்பட்ட ஏனைய கிராமங்களுக்கெல்லாம மீள இணைப்புக்கள் வழங்கப் பட்டுள்ளன—

இதையிட்டு பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் இவ்வேலைகள் தாமதம் அடைந்துள்ளன என்று தெரிவித்தார்—

(ஐ—404)

### நீர் விநியோகம் சீரற்ற நிலையில்

கட்டுகஸ்தோட்டை ஏப் 9

கண்டி பூரணவத்தையில் மாபனாவதுர பகுதிகளுக்கு கண்டி மாநகரசபை வழங்கும நீர் விநியோகம திருப்தியற்ற நிலையில் விநியோகிக்கப்படுவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்—

இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரையுமே நீர் விநியோகம வழங்கப்படுவதால் இரவு நேரங்களிலேயே தமது வீட்டுக் கடமைகளைச் செய்ய வேண்டியிருப்பதாகவும இதனால் காலையில் தொழிலுக்குச் செல்வோர் மிகவும சிரமப்படுவதாகவும கூறுகின்றனர்— (ஐ—135)

அமைச்சர் அத்துலத் முதலி உத்தேசித்திருக்கிறார்.

பாடசாலையில் இலவசமாகக் கல்வி போதிக்கப்படுகிறது. இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இலவசமாக மதிய உணவும் கொடுக்கப்படுகிறது.

அப்படியிருந்தும் பல ஏழைப் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. உடுப்புகளுக்கும் வேறு தேவைகளுக்கும் பணம் இல்லாததுதான் காரணம்.

பாடசாலை செல்லும் வயதில் பிள்ளைகளை வேலைக்கு விட்டு அந்தச் சம்பாத்தியத்தில் வாழும் பெற்றோர் பலர் இருக்கிறார்கள்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள் இல்லை என்று அவர்களைத் தண்டித்து என்ன பயன்? நீதிமன்றத்தில் விதிக்கப்படும் அபராதத் தொகையைக் கூட அவர்களால் செலுத்த முடியாதே.

வறுமை ஒழிக்கப்பட வேண்டும். பெற்றோரின் வருமானம் அதிகரிப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும். பிள்ளைகளை வேலைக்கு விட்டு அவர்களின் உழைப்பில் பெற்றோர் தமது வயிற்றை நிரப்ப வேண்டியுள்ள அவல நிலை மாற்றப்பட வேண்டும்.

அப்போது எல்லாப் பெற்றோரும் சுயமாகவே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவார்கள். அனுப்புமாறு நிர்ப்பந்திப்பதற்குச் சட்டம் தேவைப்படாது.

எல்லாப் பிள்ளைகளும் பாடசாலை சென்று படித்தால் நாட்டில் எழுத்தறிவுள்ளவர்களின் விகிதாசாரம் மீண்டும் அதிகரிக்கும்.

---

இப்பகுதியில் வாழும் பின்தங்கிய ஏழை இந்துச் சிறார்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி அறநெறிப் பாடசாலை ஒன்று வைபவரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு புதிய ஆடைகளும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கடந்த சில வருடங்களாக பாழடைந்து கிடந்த இவ்வாலயத்தை புதுப் பொலிவுடன், இயங்கச் செய்த பெருமை பிரபல தொழிலதிபர் திரு தி. செந்தில்வேளைச் சாரும்.

அறநெறிப் பாடசாலையை தொண்டு ரீதியில் நடத்தும் பொறுப்பினை ஆர்வமிக்க பேலியகொடை சைவ முன்னேற்றச் சங்க இளைஞர்கள் கையேற்றுள்ளனர்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக இந்துசமய, கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் கலந்து கொள்வார்.

(நூ-ங)

---

## பாடசாலைகளுக்கு காகிதாதிகள் வழங்கவில்லை

வறக்காப்பொளை ஏப் 9

கேகாலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றிற்கு இம்முறை எதுவித எழுதுகருவிகளும் வழங்கப்படவில்லை என அதிபர்கள் பலரும் முறையிடுகின்றனர்-

இதனால் கடிதங்களை எழுதவோ வேறு எதும் விபரங்களை வழங்கவோ காகிதாதிகள் இல்லாத நிலை அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது- (ஐ-333)

---

# நீர், மின்சார தடை: மக்கள் அவதி

## ஆசிரியருக்கு கடிதம்

அக்குறணையில் கடந்த பல வருடங்களில் தொடர்ந்து முஸ்லிம்களின் நோன்பு பண்டிகைக் காலங்களில் நீர் மின்சார விநியோகம் அத்தியாவசிய நேரங்களில் துண்டிக்கப்பட்டு வருகிறது-

அவ்வாறே தற்போதும் நீர் முக்கியமான நேரங்களில் தடைபடுவதால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்-

குழாய் நீரையே நம்பியிருக்கும் மக்கள் உரிய காலங்களில் நீர் கிடைக்காமையினால் அதிருப்தி அடைந்து வருகின்றனர்-

விஷேட தினமான பண்டிகை நாட்களில் கூட நீர் வெட்டு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது-

இதே போன்று மின்சாரமும் துண்டிக்கப்படுவது வழக்கமாகி விட்டது- இதனால் பெருநாளை சிறப்பாக கொண்டாட முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்-

அத்துடன் இப்படியான விஷேட தினங்களிலா இவ்வாறு நடைபெற வேண்டுமென பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர்-

இதுவரை காலமும் இவ்வாறான செயலைத் தடுக்க யாரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை-

இனி வரும் விஷேட தினங்களில் நீர் மின்சாரத் துண்டிப்பினைத் தடுத்து அத்தியாவசிய நேரங்களில் அவை கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்-

செல்வி ஜிஹானா ஹமீட்
அக்குறணை-

---

## புத்தாண்டு வியாபாரம் களை கட்டுகிறது

வாழைச்சேனை, ஏப் 9

வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதியில் புத்தாண்டு வியாபாரம் களை கட்டியுள்ளது-

பொருட்களை வாங்குவதற்காக வெருகல், வாகரை, காயன்கேணி, மாங்கேணி, வாகனேரி பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழைச்சேனை வர ஆரம்பித்துள்ளனர்-

[நூ-ரி]

---

## சிந்தனைகள்

ரமழான் மாதமானது ஒரு சிறப்புமிக்க மாதமாகும்-

இச்சிறப்பு மிக்க ரமழான் மாதத்தின் முற்பகுதி இறைவனுடைய ரஹ்மத்தாகவும் நடுப்பகுதி மஹ்பிறத்தாக (பாவமன்னிப்பாக)வும் இறுதிப் பகுதி நரக நெருப்பை விடுதலை பெறுவதாகவும் இருக்கின்றது-

இப்புனித மிகு மாதத்தில் எவரேனும் ஒருவர் தனது வேலைக்காரர்களுடைய வேலையின் தன்மையை பளுவை குறைக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ்-த்தஆலா மன்னிப்பளித்து நரக விடுதலையும் அளிக்கின்றான்-

மேலும் இப்புனித மிகு மாதமானது பொறுமையின் மாதமுமாகும்- பொறுமை செய்வோருக்கு இறைவன் சுவர்க்கத்தைச் சன்மானமாக வழங்குகிறான்-

இன்னும் இம்மாதமானது சகோதரத்துவத்தைப் பேணும் சிறப்பான மாதமுமாகும்-

எம பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு அருளியுள்ளார்கள்-

இம்மாதத்தில் நான்கு விடயங்களை அதிகமாகச் செய்து வாருங்கள்-

அவற்றில் இரண்டு விடயங்கள் இரட்சகனாகிய இறைவனைத் திருப்திப்படுத்துவதாகும்-

மேலும் இரண்டு விடயங்களை கேட்பதை விட்டும் ஓய்ந்திருக்க முடியாது-

அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தும் விடயங்களாவன- லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற திருக்கலிமாவை அதிகமாகக் கூறுவதும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருவதுமாகும்-

மற்றைய இரண்டு விடயங்களாவன அல்லாஹ்விடம் சுவர்க்கத்தைக் கேட்பதும் நரகத்தை விட்டும் பாதுகாப்பு தேடுவதுமாகும்-

மேலும் எவரேனும் ஒருவர் ஒரு நோன்பாளிக்கு நீர் புகட்டு வாரானால் கியாமத்து நாளில் ஹவ்லுல் கவ்தர் என்ற நதியிலிருந்து அல்லாஹ் அவருக்கு நீர் புகட்டுவான்-

அதனால் சுவர்க்கம் செல்லும் வரை அவருக்குத் தாகம் ஏற்படாது என எமபெருமானார் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்-

உயிரோட்டமுள்ள நோன்பு மனிதனது மனதில் எழும் தீய உணர்வுகளாக கட்டுப்படுத்தி ரமழான் அல்லாத காலங்களில் ஒரு கட்டுப்பாட்டுடன் செல்ல வழி வகுக்கின்றது.

சமூகப் பயனுடன் இந்நோன்பை தொடர்புபடுத்தி நோக்குகையில் ஒவ்வொரு வேளையிலும் வயிறு புடைக்க உண்ணும் ஒருவன் பசியின் கொடுமையினால் அவதியுறும் நிலையை அனுபவிப்பதில்லை-

ஆனால் அனைவரும் நோன்பு நோற்கின்ற போது மூவேளைக்கும் சரியான உணவின்றி கஷ்டப்படும் ஒருவரின் நிலையை மற்றவன் உணர்கிறான்- தன்னிடமுள்ளதை ஈர்ந்துண்ணும் பழக்கம் பிறக்கின்றது-

இதனால் அல்லாஹ்வின் பேரருளை பெறுவது மாத்திரமின்றி மக்களிடமுள்ள நெருக்கமும் அன்பும் கண்ணியமும் கிடைக்கிறது-

நோன்பாளிகள் மனப் பக்குவத்தை கடைப்பிடிப்பதால் சமூகத்தில் குற்றச் செயல்கள் குறைந்து ஒற்றுமையும் நல் வாழ்வும் பிறக்கிறது.

— சித்தி ஸீனா நௌஷாத்

---

மிகவும் சிரமப்படுவதாகவும் கூறுகின்றனர்- (ஐ-135)

## போக்குவரத்து நடவடிக்கை

கொழும்பு, ஏப். 10

பண்டிகைக்கால போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க போக்குவரத்து அமைச்சு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது-

பண்டிகை காலத்தில் 35 விசேஷ ரயில் சேவைகள் நடத்தப்படுவதற்கான ஒழுங்குகளை ரயில் திணைக்களம் செய்துள்ளது-

இதே சமயம் பண்டிகையின் பொருட்டு தத்தமது வீடுகளை நோக்கிச் செல்லும் பெருந்தொகையான மக்களின் வசதி கருதி நீண்ட தூர சேவைகளை போக்குவரத்து சபை ஒழுங்கு செய்துள்ளது-

தனியார் பஸ் உரிமையாளர்களும் நீண்ட தூர பஸ் சேவைகளை நடத்த முன்வந்துள்ளனர்- (ஐ-032)

## கோப்பியின் விலை வீழ்ச்சி

வறக்காப்பொளை ஏப் 9

என்றுமில்லாத வகையில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் கோப்பி உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர்-

மேலும் கோப்பி விலை உயரும் என எதிர்பார்த்த கோப்பியினைச் சேகரித்து வைத்துள்ள கொள்முதல் வியாபாரிகள் பலரும் இதனால் பெரிதும் கவலையடைந்துள்ளனர்-

எண்பது ரூபா வரை விலை போன ஒரு கிலோ கோப்பி தற்போது 25 ரூபாவாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது- (ஐ—333)

# 200 அணுகுண்டுகள் இஸ்ரவேலிடம் உண்டு

## அரபு இராணுவ நிபுணர் ஆய்வின் பின் அறிவிப்பு

அபுடாபி, ஏப்ரல் 10

**இஸ்ரவேல் வசம் சுமார் 200 அணுகுண்டுகள் இருபபதாக அரபு இராணுவ நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். 30 ஆண்டு ,ளுக்கு முன்னர் இஸ்ரவேலிடம் அணு ஆயுதங் ,ளும் இருந்ததாக அவர்கள் தெரிவித்து இருக்கின்றனர்.**

அரபு லீக் இராணுவ ஆராய்ச்சித் திணைக்கள பிரதம ஆய்வாளர் ஹசன் அல்பாசாம இது பற்றி அறிவித்திருக்கிறார்.

ஐக்கிய அரபுக் குடியரசு சஞ்சிகையொன்றில் இவரது கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அணு குண்டுகளை விமானஙகளில் வைத்து ஏவக் கூடிய திறமை இஸ்ரவேலுக்கு இருக்கிறது.

இஸ்ரவேல் அணுகுண்டுகள் ஒவ்வொன்றும சுமார் 20,000 கிலோ தொன் எடை கொண்டவை என அவர் தெரிவித்திருக்கிறார், இந்த இரகசியத் தகவல்கள் எப்படிக் கிடைத்தன என்ற விவரத்தை அவர் வெளியிட மறுத்து விட்டார்.

அரபு நாடுகள் இஸ்ரவேலுடன் நான்கு தடவைகள் பாரிய யுத்தஙகளை நடத்தியிருக்கின்றன.

இஸ்ரவேலர்களிடம அணு ஆயுதஙகள் இருப்பதாக அவை அடிக்கடி குற்றம சாட்டி வந்துள்ளன, இதே வேளையில் தமமிடம அணு ஆயுதஙகள் இல்லை எனவும அவை மறுத்து வந்திருக்கின்றன.

கடந்த ஆண்டு ஈராக், அல்அபெட் என்னும ராக்கெட் ஒன்றை விண்வெளிக்கு ஏவியது. இது எமது எதிர்காலத்தில் நமபிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது, இதற்கு உகந்த முறையில் ஆதரவு நல்கப்பட்டால அரபு ஆயுதத்துறை வளர்ச்சிக்கு அது வழிகோலுமென பாசாம தெரிவித்திருக்கிறார்.

கூட்டு முறையிலான இராணுவ ஆயுதத் திட்டமொன்றைச் செயல்படுத்த அரபு நாடுகள் விசேஷமாக எகிப்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது, ஆயினும இந்தப் பேச்சு வார்த்தைகள் இன்னும வெற்றி தேடித்தரவில்லை.

(எ)

## லிதுவேனியாவை முற்றாக சரணடையச் செய்ய ரஷ்ய தலைவர் முயற்சி

மாஸ்கோ, ஏப் 10

லிதுவேனியாவை முற்றாகச் சரணடையச் செய்ய முயற்சி மேற்கொள்ளப் போவதாக ரஷ்ய தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் அறிவித்திருக்கிறார்.

பால்டிக் குடியரசான லிதுவேனியா கடந்த மார்ச் மாதம 11 ஆம திகதி சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது.

இந்த முடிவினை மாற்றி சரணடைய முன்வராது போனால் கடும நடவடிக்கை எடுக்கப்படுமென ரஷ்யத் தலைவர் எச்சரித்திருக்கிறார்.

இதேவேளையில் லிதுவேனியாவைப் போன்று லத்வியா குடியரசும அடுத்தமாதம சுதந்திரப் பிரகடனம செய்யத் திட்டமிட்டிருக்கிறது.

டிரான்ஸ்கோசியன் குடியரசும சுதந்திரம கோரி போராட்டம நடத்தத் தலைப்பட்டிருக்கிறது.

60,000 க்குமதிக ஜோர்ஜிய வாசிகள் டிரான்ஸ் கோசியன் சுதந்திரத்திற்காக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

ரஷ்யா அதன் அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம குடியரசுகளின் நெருக்கடிகளை ஒருவாறு சமாளித்து வருகிறது.

(எ)



எதிர்ப்புத் தெரிவிக்கும் சீக்கிய எம். பிக்கள்

## சீனாவில் 5 பேருக்கு மரணதண்டனை

பீக்கிங் ஏப் 11

டாக்ஸி சாரதிகளிடமிருந்து திருடியதாகவும, சிலரைப் படுகொலை செய்ததாகவும சந்தேகத்தின் பேரில் கைதான 5 பேருக்கு திஙகட்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது:

ஷாஙகர்ய பத்திரிகையான ஷாஙகர்ய் பத்திரிகையான செய்தியை வெளியிட்டிருக்கிறது.

(எ)

## கராச்சியில் துருப்புகள் [illegible]

கராச்சி, ஏப 10

காரச்சியில கலகத்தால் பாதிக்கப்பட்ட [illegible] துருப்புகள் [illegible] பணியில் [illegible]ப்படுத்தப்பட்டுள்ளன.

வாகனங்களை [illegible] இடவும் ஆணை பிறப்பிக்கப்பட் [illegible]

## உலகச் செய்திகள்

வெளிநாட்டவர்கள்

## இந்தியாவில் முதலீடு செய்ய

செய்தியை வெளியிட்டிருக்கிறது. (எ)

# உலகச் செய்திகள்

வெளிநாட்டவர்கள்

## இந்தியாவில் முதலீடு செய்ய கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்

### பிரதமர் பிரதாப் சிங் அறிவிப்பு

புதுடில்லி ஏப் 10

வெளிநாட்டினர் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான கட்டுப்பாடுகள் வெகுவாக தளர்த்தப்படும்.

இது பற்றி திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப்சிங் அறிவித்தார்.

உலக பொருளாதார அமைப்புக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது பிரதாப்சிங் இதுபற்றி அறிவித்தார்.

எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தொழில் துறையை நவீனமயப்படுத்த இந்தியாவில் முதலீடு செய்பவர்களுக்கு சுதந்திரமாக அவற்றில் ஈடுபட இடமளிப்பது அவசியம்.

எமது உற்பத்திகளுக்கு சர்வதேச முறையில் போட்டியினை ஏற்படுத்த வேண்டும்.

உலகசந்தையில் அவற்றுக்கு பெரும் கிராக்கி எற்படும் விதத்தில் நாம் செயல்பட வேண்டும்.

தொழில் துறையில் அதிகாரிகளின் கட்டுப் பாடுகளை நாம தளர்த்துவோம்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் கூறினார். (எ)



எதிர்ப்புத் தெரிவிக்கும் சீக்கிய எம். பிக்கள்

டில்லி நாடாளுமன்றத்திற்குள் வாளுடன் பிரவேசிக்க முயன்ற சிமரன்ஜித் சிங்மான், தயான் சிங்மென் ஆகிய இருவரும பாதுகாப்பு அதிகாரிகளால் தடுக்கப்பட்டனர், அவ்வேளையில் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் நாடாளுமன்ற படிக்கட்டில் அமர்ந்து அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்தனர், கடந்த வாரம இந்தச் சம்பவம இடம பெற்றது. (எ*ச)

## அஞ்ஞாதவாசமிருக்கும் தலைவர்களுடன் மண்டேலா பேச்சு

லுசாக்கா, ஏப் 10

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அஞ்ஞாதவாசமிருக்கும தலைவர்களுடன் கறுப்பர் தலைவர் நெல்சன் மண்டேலா இரகசிய பேச்சு வார்த்தைகளை திங்களன்று ஆரம்பித்தார்.

இப்பேச்சு வார்த்தைகள் ஸாம்பியாவில் நடைபெற்றன, ஸாம்பியாவில் பேச்சு வார்த்தை எந்த இடத்தில் நடந்தது என்ற விவரம வெளியிடப்படவில்லை.

தலைவர்கள் தமது பேச்சு வார்த்தைகள் அமைதியான சூழ்நிலையில் நடைபெற வேண்டும என விரும்பியதால் அதற்குப் பொருத்தமான ஒரு இடத்திலேயே பேச்சு வார்த்தைகள் ஆரமபமாகின.

இவ்வாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேச்சாளர் டொம செபினா கூறினார்,

மேற்படி காங்கிரஸின் உதவித் தலைவராக மண்டேலா இப்போது பதவி வகிக்கின்றார், ஞாயிறன்று ஸாம்பியா வந்த மண்டேலா ஜனாதிபதி கெனத் கவுண்டாவை சந்தித்து தென் ஆபிரிக்க நிலைமைகள் தொடர்பாக பேச்சு நடத்தினார். (எ)

## கராச்சியில் துருப்புக்கள் மீண்டும் பணியில்

கராச்சி, ஏப் 10

கராச்சியில கலகத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் துருப்புகள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.

வாகனங்களை சோதனை இடவும ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆளும கட்சியின் (பிபிபி), மொஹாஜிர் இயக்க மாணவர்கள் மோதியதில 210 பேர் இறந்துள்ளனர். இதனை அடுத்தே துருப்புகள் மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. (எ-ரி)

## பத்திரிகைத் தடை நீக்கம்

டாக்கா, ஏப் 10

வங்காள தேசத்தில் ஒரு தினசரி, இரண்டு வார இதழ்கள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு திங்களன்று தளர்த்தப்பட்டது.

வங்காளதேச ஜனாதிபதி ஹுசேன் மொகமட் எர்ஷாத் இத்தடை உத்தரவினை நீக்கினார். (எ-ரி)

## முழு உலகுக்கும் முன்மாதிரியான அமைப்பில் மே தின கொண்டாட்டம்

### ஐ. தே. க. தீர்மானம்

கொழும்பு, ஏப் 10

முழு உலகுக்கும முன்மாதிரியான அமைப்பில் மேதின ஊர்வலத்தையும, கொண்டாட்டத்தையும நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

பிறருக்கு முன்மாதிரியான முறையில் ஒழுக்கமான அமைப்பிலான ஒரு மேதினக் கொண்டாட்டத்தை நடத்த வேண்டுமென ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நேற்று முன்தினம நடைபெற்ற கூட்டம ஒன்றில் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் இக்கூட்டம நடைபெற்றது.

மேதின ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் சகல அமைச்சர்களும, மாகாண சபைகளின் உறுப்பினர்களும, ஜாதிக்க சேவக்க சங்க அதிகாரிகளும பங்குபற்றினர்.

கொழும்பு நகர எல்லைக்குள் 1000 பேர் என்ற அடிப்படையிலும, மற்ற இடங்களில் 500 பேர் என்ற அடிப்படையிலும வெளிப்பகுதிகளில் 250 பேர் என்ற அடிப்படையிலும கட்சி உறுப்பினர்களைப் பங்குபற்றச் செய்ய எம பிமார்கள் விருப்பம தெரிவித்தனர்.

சுகததாச விளையாட்டரங்கில் மேதின ஊர்வலம ஆரமபமாகும.

காலிமுகத் திடலில் மேதினக் கொண்டாட்டம நடத்தப்படும.

மேதினக் கொண்டாட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகளைப் பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கவனிப்பார். (ல-007)

## மூடப்படும் நிலை

கேகாலை ஏப் 9

கேகாலை டெடிகமை தேர்தல் தொகுதியில் உள்ள பன்னேகமை கீழ்ப் பிரிவு அரசினர் தமிழ் பாடசாலை இன்னும சில வாரங்களில் மூடப்படலாம என பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது இங்கு ஒரேயொரு ஆசிரியரே கடமையாற்றி வருகிறார்.

தோட்டப் பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளை அருகேயுள்ள சிங்களப் பாடசாலைகளில் சேர்த்து விட்டார்கள், இதனால் பிள்ளைகளின் எண்ணிக்கையும குறைந்து விட்டது. (ஐ-197)

## காம்பூஷிய நெருக்கடி தீர்வுக்கு புதிய திட்டம்

பாங்கொக், ஏப் 10

காமபூஷிய நெருக்கடி தீர்வுக்கு இளவரசர் சிஹானுக் புதிய சமாதானத் திட்டமொன்றை வகுத்திருக்கிறார்.

அவரது திட்டத்தில் இரு புதிய அமசங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

காமபூஷிய சுபீட்சத்துக்காக இந்தச் சமாதான திட்டம வகுக்கப்பட்டிருப்பதாக சிஹானுக் தெரிவித்திருக்கிறார்.

சமாதான பேச்சு வார்த்தைகளின் பொருட்டு ஹுன்சென் அரசாங்கத்தின் ஆறு உறுப்பினர்களை காமபூஷியா தேர்ந்தெடுக்க வேண்டும. அதே வேளையில் கிளர்ச்சிப் பிரிவுகள் மூன்றிலிருந்தும ஆறுபேரை அழைக்க வேண்டும, இவ்வாறு இளவரசர் சிஹானுக் ஆலோசனை வழங்கியுள்ளார்.

உடனடியாக யுத்தநிறுத்தம கடைப் பிடிக்கப்பட வேண்டும, ஐ நா பாதுகாப்புக் கவுன்ஸில் அதன் ஐந்து நிரந்தரப் பிரதிநிதிகளை அனுப்பி யுத்த நிறுத்தத்தை அவதானிக்கச் செய்ய வேண்டும.

இவ்வாறு சிஹானுக் தெரிவித்திருக்கிறார். (எ)

## பல் கட்சி முறை அறிமுகத்துக்கு ஆணைக்குழு

அமான், ஏப் 10

ஜோர்தானில் பல்கட்சி முறையை அறிமுகம செய்யும விதத்தில் மன்னர் ஹுசேன் ஆணைக்குழுவொன்றை அமைத்திருக்கிறார்,

இதன்பொருட்டு 60 முக்கிய பிரமுகர்கள் ஆணைக்குழு பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக ஜோர்தானில் பல்கட்சி முறை அறிமுகம செய்யப்படவிருக்கிறது.

ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பிரதமர் அஹமட் ஒபேதாத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செனட் சபை உறுப்பினர்கள் 11 பேர், கீழ் சபை உறுப்பினர்கள் 17 பேர் உட்பட அரசியல்வாதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், வர்த்தகர்கள் பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள், பல்கலை பேராசிரியர்கள் போன்றோர் ஆணைக்குழுவில் அங்கம வகிக்கின்றனர். (எ)

திறைசேரிக்குரிய வட்டி உட்பட

# ரயில்வே திணைக்களம்:
# 711 கோடி ரூபா நட்டம்

கொழும்பு, ஏப். 10
1979 ஆம ஆண்டு முதல் 1988 ஆம ஆண்டு வரை ரயில்வே திணைக்களத்திற்கு 711 கோடி ரூபா நட்டம ஏற்பட்டுள்ளது. திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வட்டியும இதில் அடங்கும.

இந்த நட்டத்தின் காரணமாக திணைக்களத்திற்கான சில நிதி ஒதுக்கீடுகளை திறைசேரி இடை நிறுத்தி வைத்துள்ளது.

1988 ஆம ஆண்டிலேயே ரயில்வே திணைக்களத்திற்கு மிகக் கூடுதலான நட்டம ஏற்பட்டுள்ளது. அந்த தொகை 119 கோடி ரூபாவாகும.

1979 ஆம ஆண்டு திணைக்களத்தின் நட்டம 25 கோடி ரூபாவாகும.

1984 ஆம ஆண்டு நட்டம சுமார் 100 கோடி ரூபாவை எட்டியது-

ஆனால் 1985 ஆம ஆண்டு நட்டம அரைவாசியாக குறைந்து 50 கோடியாக இருந்தது.

இந்த நிலைமையை கணக்காய்வாளர் நாயகம நாடாளுமன்றத்திற்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனை அடுத்து ரயில் சிற்றுண்டிச் சாலை செலவு, மரம அறுக்கும செலவு மற்றும வேறு பல திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இடை நிறுத்தம செய்யப்பட்டுள்ளன. (ஐ-ற)

## மலையக மக்கள் உரிமைகள்:
## இ. தொ. கா. பெற்றுக் கொடுத்தது

### தொண்டமான் பெருமிதம்

இராகலை ஏப் 9
மலையக மக்களின் உரிமைகளை இ தொ கா பெற்றுக் கொடுத்துள்ளது- அதனைப் பாதுகாத்து பயன்களை அனுபவிக்க வேண்டியது இந்திய வம்சாவளி மக்களது பொறுப்பு.

இவ்வாறு உல்லாசப் பயணத்துறை கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ் தொண்டமான் நுவரெலியாவில் இ தொ கா மாநில உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பாராட்டு வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்-

நுவரெலியா மாநில இயக்குநர் திரு எஸ் எஸ் அருள்சாமி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து அமைச்சர் கூறியதாவது—

1977, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் போது இந்திய வம்சாவளி மக்களில் 20 சதவீதமானவர்கள் வாக்காளர்களாக இருந்தனர்- இப்போது 100 சதவீத வாக்காளர்கள் இருக்கின்றனர்-

அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றில் எது ஆட்சிக்கு வந்தாலும அவர்களுடன் இருக்க வேண்டியிருந்தது.

ஆனால் இப்போது நாம இல்லாமல் எவரும ஆட்சி அமைக்க முடியாது என்பதை எல்லோருக்கும உணர்த்தியிருக்கிறேன்-

கிளிநொச்சிப் பகுதியில் இலங்கை பிரஜாவுரிமை சான்றிதழ் கொடுக்கப்படவில்லை என்ற காரணங் காட்டி சிலருக்கு உத்தியோகம நிரந்தரமாக்கப்படவில்லை என்று புகார் தெரிவித்தார்கள்-

இது தொடர்பாக சமபந்தப்பட்ட அமைச்சுக்கு எழுதிய கடிதத்தில் அரசாங்க சட்டத்தை நடைமுறை செய்ய மறுக்கும அந்த அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன்.

பின்னர் சுமார் 15 நாட்களில் அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கி உத்தியோகங்களும நிரந்தரமாக்கப்பட்டன-

உங்கள் மனைவியை அடுத்தவன் பிடித்து இழுக்கும போது பார்த்துக் கொண்டிருப்பாயேயானால் உரிமை பறிபோய் விடும- உணர்ச்சி இல்லாதவனுக்கு உரிமை கிடைக்காது-

இப்படித் திரு தொண்டமான் கூறினார்-

நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்களான திரு வி இராதாகிருஷ்ணன் பி எம நடராஜபிள்ளை மத்திய மாகாண சபை உறுப்பினர்களான திரு ஏ கதிரேஷன் திரு எஸ் ஏ கந்தசாமி உதவிச் செயலாளர் திரு வி சென்னன் இயக்குநர் திரு எம சிவலிங்கம இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு சிவகுருநாதன் நுவரெலியா கல்வி அதிகாரி திரு மாரிமுத்து நுவரெலியா பிரதேச திட்டமிடல் பகுதி இயக்குநர் திரு ரட்ணாயக்க ஆகியோரும அமைச்சர் திரு தொண்டமானைப் பாராட்டிப் பேசினார்கள்-

[ஐ—265]



### அடிக்கல் நடும் விழா

நிந்தவூர் அல்-மினா வித்தியாலயத்தில் நிலவும மாணவர்களுக்கான குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென, சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட மத்திய நிலையம தண்ணீர் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதற்கான அடிக்கல் நடும வைபவம வித்தியாலய அதிபர் ஜனாப் ஏ எல் எம அமீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட இணைப்பாளர் திரு கே கனகரத்தினம அடிக்கல் நடுவதற்கான முதற் கல்லை வித்தியாலய அதிபர் ஜனாப் அமீன் வழங்குவதைப் படத்தில் காண்க.

உதவி மாவட்ட இணைப்பாளர் ஜனாப் எம ஏ எம

## நோர்வூட்டில்

### இறைச்சி கடைக்காரர்கள் முறைப்பாடு

கொழும்பு, ஏப் 10
போயா மற்றும வெசாக் பண்டிகை, அரசாங்க விடுமுறை தினங்களில் இறைச்சிக் கடைகளை மூட நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ஆனால் சுப்பர் மார்க்கெட்டிலும வர்த்தக நிறுவனங்களிலும பைக்கட் செய்யப்பட்ட இறைச்சி விற்க அனுமதிக்கப்படுகிறது அவற்றிற்கு விலைக் கட்டுப்பாடும இல்லை.

கொழும்பு இறைச்சிக் கடைக்காரர்கள் தூதுக்குழு ஒன்று. கைத்தொழில் துறை ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமியிடம இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளது.

இந்த சந்திப்பு கடந்த வியாழன் ராஜாங்க அமைச்சில் நடந்தது. (ஐ-சூ)

## வீடுடைப்பு திருட்டு சந்தேக நபர் கைது

கொழும்பு, ஏப் 10
மகரகமை மிரிஹான ஆகிய பொலீஸ் பிரிவுகளில் நீண்டகாலமாக பல வீடுடைப்புத் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும சந்தேகநபர் ஒருவர் மிரிஹான பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்,

சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர் தெரிவித்த தகவலின்படி பல வீடுடைப்பு சமபவங்கள் பற்றிய விவரங்கள் தெரிய வந்தன-

வீடுகளின் ... கூரைகளினூடாக அல்லது ஜன்னல் வழியாக நுழைந்தே இவர் இந்தத் திருட்டுக்களை புரிந்துள்ளார் என்றும கூறப்படுகிறது-

இதுவரை சுமார் இரண்டு லட்சம ரூபாவுக்குக் கூடுதலான தொகை பெறுமதியான பொருட்கள் இந்நபரினால் திருடப்பட்டுள்ளன- இவர் ஒரு போதைவஸ்துப் பிரியர் என்றும கூறப்படுகிறது-

மிரிஹான பொலீஸார் மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்-

[ஐ—வ]

### எரிந்த வங்கி திருத்தப்பட இல்லை

அக்குறணை ஏப் 9
கல்ஹின்ன கூட்டுறவு கிராமிய வங்கி இனை அண்மைக்கால சமபவங்களின் போது எரிக்கப்பட்டது-

இதுவரை இவ்வங்கியை வேறு இடத்தில் அமைக்கவோ அல்லது முன்னைய கட்டிடத்தில் அமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை-

இவ்வங்கியில் கணக்கு வைத்திருந்தவர்களும அடகு வைத்திருந்தவர்களும இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்-

[ஐ—411]

## அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை பலமடங்கு அதிகரிப்பு

கொழும்பு ஏப் 10
தமிழ் சிங்கள புதுவருடம நெருங்கி வரும வேளையில் அத்தியாவசிய உணவுப்

இந்த வருடம இவற்றின் விலை பெருமளவு அதிகரித்திருக்கிறது-

மக்களும் பதவியும்

### உபதலைவராக தெரிவு



லிபிய அரசின் அங்கீகாரத்தின் கீழ் அனைத்து இன மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட "இலங்கை மக்கள் காங்கிரஸின் உப தலைவராக ஜனாப் எம எஸ் மொகமட் ஸுபர், தெரிவாகியுள்ளார்.

இவர், தற்சமயம லிபியாவில் அமைந்துள்ள சர்வதேச இஸ்லாமிய தஃவா பல்கலைக்கழகத்தில் ஐந்தாம வருட மாணவராவார்.

கண்டி மாவில்மடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கண்டி சியமபலாகஸ் தென்னை, பாணந்துறை, தொட்டவத்தை அல் - பஹ்ரியா கல்லூரிகளின் பழைய மாணவரும ஆவார்.

(ஐ-ங)

### மாஜிக் நிபுணர் அமைப்பு

கொழும்பு, ஏப் 10
"இலங்கை மாயாஜால" வட்டத்தின் (மாஜிக் நிபுணர்கள் அமைப்பு) வருடாந்த பொதுக் கூட்டம அண்மையில் பொரளை வை எம பி ஏ யில் நடைபெற்றது.

1990ஆம ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:

தலைவர்- திரு ஆர் போதினாகொட, உப தலைவர்- திரு நொயெல் விக்கிரமசிங்க, செயலாளர்- திரு ரொஹான் ஜயசேகர, உதவியாளர் மற்றும கலை நிகழ்ச்சிகள் செயலாளர்- திரு ஷெல்டன் ஜயசேகர, பொருளாளர்- திரு எஸ் மாமன், கணக்காளர்- திரு காலிட் பைலா, நூலகர்- திரு எச் டி என் குணசேகர.

உப தலைவர்கள்—

லெப்டினன் கேர்ணல் அர் டி அல்விஸ், மேஜர் ஆர் எம பியதிலக்க, காப்டன் டபிள்யு பி ராமச்சந்திர

# நோர்வூட்டில் காணிக் கச்சேரி

## அண்மையில் நடத்தப்பட்டது

பொகவந்தலாவை ஏப் 9 அண்மையில் நோர்வூட் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் காணி கச்சேரி நடத்தப்பட்டது-

அமபகமுவ (கினிகத்தேனை) பிரதேச செயலாளர் தலைமையில் காணி வழங்குவதற்கான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

35 பேர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்த பொது மக்களின் முன்னிலையில் ஆட்சேபனையும அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது-

குடும்ப வருமானம குறைந்தோர் காணி வீடு சொந்தமாக இல்லாதோருக்கும நிரந்தரமாக இங்கு குடியிருப்போருக்கும முதலிடம அளிக்கப்பட்டது-

குறைந்தபட்சம 4 ஆண்டுகளுக்கு மேல் நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கும மேற்கண்ட தகைமை இருப்பின் அவர்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படும என கினிகத்தேனை உதவி அரசாங்க அதிபர் அங்கு கருத்துத் தெரிவித்தார்-

ஏற்கனவே அரசு வழங்கிய காணியை கைமாறியவர்களும வசதி படைத்தவர்களும இதில் கலந்து கொள்வோருக்கும எக்காரணம் கொண்டும காணி வழங்கப்பட மாட்டாது எனவும அங்கு அறிவிக்கப்பட்டது-

நோர்வூட்டில் நடந்த காணி கச்சேரியில் காணி எங்கு வழங்குவதென அறிவிக்கப்படவில்லை. ஆனால் ஆட்சேபனை கொடுக்கப்படாத மனுதாரர்களுக்கு வெகு விரைவில் காணி வழங்குவதற்கான அனுமதிப் பத்திரம அனுப்பப்படும என அறிவிக்கப்பட்டது-

(இ-041)

திரு கே கனகரத்தினம் அடிக்கல் நடுவதற்கான முதற் கல்லை வித்தியாலய அதிபர் ஜனாப் அமீன் வழங்குவதைப் படத்தில் காண்க.

உதவி மாவட்ட இணைப்பாளர் ஜனாப் எம ஏ எம மன்சூர், பிரதி அதிபர் ஜனாப் எம ஏ அஸீஸ், பிரதேச இணைப்பாளர் ஜனாப் ஐ எம தஸ்தகீர் ஆகியோரும படத்தில் காணப்படுகின்றனர்.

[படம்- ஏ எல் எம சலீம] (இ-217)

## கார் சாரதிகள் சங்கம்

பிரத்தியேக வாடகை கார் சாரதிகளின் சங்கம ஒன்று கேகாலையில ஆரமபிக்கப்பட்டுள்ளது பிரத்தியேக கார் சாரதிகளை எதிர் நோக்கும பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது-

(ஐ-197)

# தொழிலாளருக்கு

## சேவை செய்வதுதான் தொ. சங்கங்களின் கடமை

### அஷ்,ப் அஸீஸ் உரை

பொகவந்தலாவை ஏப் 9 தொழிலாளர்களுக்குச் சேவை செய்வது தான் தொழிற்சங்கங்களின் கடமையாகும- இதனை மறந்து சிலர் போட்டிகளையும பொறாமைகளையும் வளர்க்க முயல்கின்றனர்-

மேற்கண்டவாறு டிக்கோயா இன்ஜஸ்டி கீழ்ப் பிரிவில் நடந்த ஐ தொ காவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது ஐ தொ கா நிதிச் செயலகளர் ஜனாப் அஷ்ரப் அசீஸ் குறிப்பிட்டார்

கூட்டத்திற்குத் துணைப் பொதுச் செயலாளர் திரு இரா தர்மலிங்கம் தலைமை வகித்தார்-

அஷ்ரப் அசீஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

போட்டியும பொறாமையும் எவ்வாறு ஏற்பட வேண்டும என்றால் அது சேவை செய்வதில் ஏற்பட வேண்டும- தொழிலாளிக்கு செய்கின்ற நன்மையாக இருக்க வேண்டும-

சங்கத்தில் சேருவதற்கு அவரவர்க்கு உரிமையுண்டு- தாம விருமபிய சங்கத்தில் இணைவதற்கு யாரும தடை போட முடியாது-

இப்படிச் சொன்னார் அஷ்ரப் அசீஸ்-

மாதர் அணித் தலைவி திருமதி ஜ நல்லசெல்வம ஜே பி திரு இரா தர்மலிங்கம் திரு கே இராமநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

[ஜ—041]

# தோட்ட பாடசாலை விடயங்களில்

## உயர் அதிகாரிகள் அலட்சியம்

### நாடாளுமன்ற உறுப்பினர் கவலை

கேகாலை, ஏப் 9 தோட்டப் பாடசாலை விடயத்தில் சில உயர் அதிகாரிகளும, ஆசிரியர்களும அலட்சிய மனப்பான்மையுடனே நடந்து வருகிறார்கள்.

இவ்வாறு கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும, எதிர்க்கட்சி உறுப்பினருமான திரு அதாவுட செனவிரட்ன குறிப்பிட்டார்.

ல தோ தொ யூனியன் கேகாலைக் கிளைக் கூட்டம ஒன்று கேகாலை கோலிந்தா தோட்டப் பாடசாலையில் இடமபெற்றது. அதில் கலந்து உரையாற்றும போதே திரு செனவிரட்ன மேற்கண்டவாறு கூறினார்-

அவர் தொடர்ந்து பேசியதாவது—

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி வளர்ச்சியில் முன்னேறுவதை ஒரு சிலர் விருமபவில்லை.

காரணம, அவர்கள் கல்வியில் முன்னேறி விட்டால், அவ்வினம மிகவும கௌரவமான சமூகமாக மாறி விடும என்பதே.

உழைப்பில் உலகில் பெயர் பெற்றது போல, கல்வித் துறையிலும மலையகம முன்னேற்றம காணும நாள் நெருங்கி விட்டது. எத்தகைய தங்கு தடைகளும, இடர்ப்பாடுகளும ஏற்பட்ட போதும, அவற்றை எதிர் கொண்டு இன்று தோட்டக் குழந்தைகள் கல்வி கற்று வருகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-197)

கொழும்பு ஏப் 10 தமிழ் சிங்கள புதுவருடம நெருங்கி வரும வேளையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும புடைவை வகைகளின் விலையும பல மடங்காக அதிகரித்து வருகிறது-

கடந்த வருடத்தை விட இந்த வருடம இவ்ற்றின் விலை பெருமளவு அதிகரித்திருக்கிறது-

கொழுமபு நகரின் மரக்கறிச் சந்தை மற்றும் புடைவைக் கடைகளுக்குச் சென்று பார்த்த போது இந்த விலை உயர்வை காணக்கூடியதாக இருந்தது-

கடந்த ஆண்டில் 65 ரூபாவுக்கு விற்கப்பட்ட சாதாரண சாரம ஒன்று தற்சமயம 85 ரூபா முதல் 90 ரூபா வரை விற்கப்படுகிறது-

நல்ல ரக சாரம 110 ரூபாவிலிருந்து 130 ரூபா வரை அதிகரிக்கப்பட்டிருக்கிறது- சாதாரண ரக ஷேர்ட் ஒன்றின் விலை 85 ரூபாவிலிருந்து 125 ரூபா வரை அதிகரித்திருக்கிறது- 150 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஷேர்ட் இன்று 225 ரூபாவுக்கும அதிகமாகவே விற்பனை செய்யப்படுகிறது-

சிறந்த ரக ஷேர்ட் புடைவை ஒன்றின் விலை ரூபா 350 வரை அதிகரித்திருக்கிறது- கடந்த காலங்களில் 12 ரூபா 15 சதத்திற்கு விற்கப்பட்ட சாதாரண ரக வெள்ளைப் புடைவை ஒரு மீட்டர் தற்சமயம் 35 ரூபா முதல் 42 ரூபாவரை அதிகரித்திருக்கிறது-

அவ்வாறே பொலியஸ்டர் ரக வெள்ளைப் புடைவை ஒரு மீட்டர் 90 ரூபாவிலிருந்து 120 ரூபாவாகும- 25 ரூபாவுக்கு இருந்த ஒரு மீட்டர் சீத்தைத் துணி கூட இன்று 50 ரூபாவுக்கும அதிகமாக விற்கப்படுகிறது-

350 ரூபாவுக்கு இருந்த சாதாரண சாரி ஒன்றின் விலை இன்று 450 ரூபாவக்கு இருந்த வெளிநாட்டு சாரிகள் இன்று 800 ரூபா முதல் 1000 ரூபா வரை விற்கப்படுகின்றன-

[ஜ—வ]

லெப்டினன் கேர்ணல் அர் டி அல்விஸ், மேஜர் அர் எம பியதிலக்க, காப்டன் டபிள்யு பி ராமச்சந்திர, திருவாளர்கள் விக்ரமபால அல்விஸ், எம டி எஸ் குணதிலக, ஈ சுந்தரசிங்க,

நிர்வாகக் குழு- திருவாளர்கள் எம நிக்கலஸ், பொன்டியன் பெர்னாண்டோ, அர் எம எஸ் ரத்னாயக்க, லக்ஷ்மன் ஜெயக்கொடி, திருமதி மோனா பாய்லி.

(எ)

## இஸ்லாமிய செயலக நிர்வாகிகள்

மாத்தறை, ஏபி. 9

தென்னிலங்கை இஸ்லாமிய செயலகத்தின் மாத்தறை மாவட்ட கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம அண்மையில் வெலிகம அறபா கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பணிப்பாளர் மௌலவி எம எச் எம ஜஉபர் (கல்வி அதிகாரி)

உதவிப் பணிப்பாளர்கள் ஜனாப்களான எம எச் எம ஷமஸ், எம எம ஏ றஹ்மி,

இணைச் செயலாளர்கள் ஜனாப் எம எஸ் இம இர்பான், ஜனாப் எம ஸி எம மௌஸூம

பொருளாளர் ஜனாப் எம எம எம பசீர்.

நிர்வாகப் பொறுப்பாளர்கள் எம எச் எம இனாயத்துள்ளா, இஸ்லாமும தஃவா பணியும எம எஸ் எம இர்ஷாத். கல்வி கலாசாரம, எம எஸ எம றிஸ்மி, சுகாதாரம சமூக சேவை, எம எஸ் எம ஷிப்ரி: இயக்கங்களுடான தொடர்பு.

(ஐ-430)

# லண்டனில் கனிஷ்ட விம்பிள்டன் டென்னிஸ்

## இலங்கையின் சார்பாக உமேஷ், ரொஹான் பங்கு

கொழும்பு ஏப் 9

இவ்வாண்டு லண்டனில் நடைபெறவுருக்கும் கனிஷ்ட விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இலங்கை சார்பாக உமேஷ் வாலுப்பிள்ளையும ரோஹான் டி சில்வாவும கலந்து கொள்கிறார்கள்.

கடந்த பெப்ரவரியில் கொழும்பில் நடைபெற்ற கனிஷ்ட ஆசிய டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் உமேஷ் வெற்றியீட்டினார். இ(ந்த) வெற்றி இவருக்கு விம்பிள்டன் ஆட்டத்தில் நம்பிக்கையையும உறுதியையும அளிக்கும என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மண்தரை மைதானத்தில் ஆடிப் பழகியுள்ள உமேஷுக்கு புல் தரை விம்பிள்டனில் ஆடுவதற்கு சிறிது சிரமமாக இருக்கக் கூடும.

இவர் இதுவரை கனிஷ்ட விம்பிள்டனில் ஆடியதில்லை. 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை உமேஷ் இவ்வருடத்தோடு இழந்து விடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும மற்ற வீரரான ரோஹான் டி சில்வா திறமையும ஆற்றலும கொண்ட இளைஞராவார். சமீபத்தில் கொழும்பில் நடைபெற்று முடிந்த பாஹ்ரேனுக்கு எதிரான டேவிஸ் கிண்ண கால் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியில் ரோஹான் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம உமேஷ் வேலுப்பிள்ளை பிரான்சில் நடத்தப்படவிருக்கும கனிஷ்ட வீரர்களுக்கான பகிரங்க டென்னிஸ் போட்டியிலும கலந்து கொள்ள திட்டமிட்டுள்ளார். இப்போட்டி மண் தரையிலேயே நடைபெறுவதால் இங்கு உமேஷ் தன் திறமையை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும.

(ரி—032)

### ம. மாகாண முதலமைச்சர்

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

நுவரெலியா ஏப் 9

மத்திய மாகாண முதலமைச்சர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றில் கண்டி "ஆமி" விளையாட்டு குழு நுவரெலியா "ரெட் வின்ஸ்" விளையாட்டு குழுவை தோற்கடித்தது.

கடந்த 29–3–90 அன்று நுவரெலியா மாநகர சபை மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது.

கண்டி "ஆமி" விளையாட்டு குழு 5–1 என்ற கோல்கள் அடிப்படையில் "ரெட் வின்ஸ்" விளையாட்டு குழுவை தோற்கடித்தது.

இப் போட்டிக்கு நடுவராக இலங்கை உதைபந்தாட்ட சங்க இரண்டாம தர நடுவரான திரு டி பெரியசாமி கடமையாற்றினார்.

(த—412)

# விளையாட்டு பகுதி

### ரூபவாஹினி பரிசளிப்பு விழா

கொழும்பு ஏப் 10

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம 1990 ஆம ஆண்டிற்கான "ரூபவாஹினி பரிசளிப்பு விழா" ஒன்றினை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

ரூபவாஹினியில் நாடகமாக ஒளிபரப்பப்பட்ட சிறந்த உள்ளூர் தயாரிப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்படும.

1987 ஆம ஆண்டு ஜனவரி 1ஆம திகதி முதல 1989 ஆம ஆண்டு டிசமபர் 31ஆம திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபவாஹினியிலும, சுயாதீன தொலைக் காட்சி சேவையிலும (ஐ டி என்) ஒளிபரப்பான உள்ளூர் தொலைக் காட்சித் தயாரிப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும.

போட்டிவிதி முறைகள் மற்றும விவரங்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பரிசளிப்புக் குழுத் தலைவரைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டி முடிவு தினம எதிர் வரும 20ஆம திகதியாகும

(எ)

### தென் ஆபிரிக்கா வரும்

## அமெ, ஆஸி வீரர்களின் கொடும்பாவி எரிக்க விளை. காங்கிரஸ் முடிவு

ஜோஹன்னஸ்பேர்க் ஏப் 10

தென் ஆபிரிக்க டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொள்ள வரும அமெரிக்க மற்றும ஆஸ்திரேலிய விளையாட்டு வீரர்களின் கொடும்பாவிகளை எரிக்க அந்நாட்டு விளையாட்டுத்துறை காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

ஆஸ்திரேலியா டேவிஸ் கிண்ண கால் இறுதி ஆட்ட வீரர்களான வலி மசூர், டரன் காஹில், ஜோன் பிட் ஜெரால்ட் ஆகியோர் உட்பட தென் ஆபிரிக்காவுக்கு விஜயம செய்துள்ள டென்னிஸ அணி வீரர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படும என்று கூறப்படுகிறது.

கடந்த ஜனவரியில் தென் ஆபிரிக்காவுக்கு மைக் கெட்டிங தலைமையில் விஜயம செய்த ஆங்கில கிரிக்கெட் அணிக்கு எதிராக தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை காங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது, அதன் பின்னர் இக்காங்கிரசின் கவனம டென்னிஸ் ஆட்டத்தின் மீது திருமபியுள்ளது.

தென் ஆபிரிக்க டென்னிஸ் ஆட்டங்களில ஈடுபட்டுள்ள அமெரிக்க மற்றும ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஒலிமபிக் டென்னிஸ் போட்டியில் பங்கு பற்றும உரிமை மறுக்கப்பட வேண்டும, சர்வதேச கிரிக்கெட் சமமேளனம தென் ஆபிரிக்காவை தமது நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்க வேண்டும, இவ்வாறு மேற்படி அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இனபேதமற்ற ஒரு தேசிய தென் ஆபிரிக்க கிரிக்கெட் அமைப்பை உருவாக்குவது தொடர்பாக இப்போது அந்நாட்டு டென்னிஸ் ஒன்றியத்துடன் நடத்தப்பட்டு வரும பேச்சு வார்த்தைகள் மேற்படி அணியினரின் வருகையால் பாதிப்படைந்துள்ளது என்றும விளையாட்டுத்துறை காங்கிரஸ் கருதுகிறது.

கறுப்பின மக்கள் வாழும பகுதிகளில் டென்னிஸ் விளையாட்டு வசதிகள் கிடையாது என்று சுட்டிக் காட்டியுள்ள இந்த அமைப்பு, கொல்ப் உட்பட பல்வேறு ஆட்டங்கள் பேரிலும இனிமேல் தமது கவனத்தைத் திருப்ப விருப்பதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

(எ—032)

## சிறுவர்களுக்கான ஒலிம்பிக் உலக நாடுகளில்

### ஏற்படுத்த வேண்டுமென ஐ. நாவிடம் கோரிக்கை

கொழும்பு ஏப் 10

சிறுவர்களுக்கான ஒலிமபிக் விளையாட்டுக்களை உலக நாடுகள் அனைத்திலும ஏற்படுத்த வேண்டும.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையிடம கோரிக்கை விடுத்திருக்கிறார் பூஜ்ய வெல்பொல விபஸ்ஸி தேரர்.

புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை – ஜப்பான் கலாசார சங்கத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் அச்சங்கத்தின் பணிப்பாளர் நாயகம வண பூஜ்ய வெல்பொல விபஸ்ஸி தேரர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கொழும்பு காசல் வீதியில் உள்ள சுகாதார அமைச்சின் விளையாட்டரங்கில் ஜப்பான்–இலங்கை நட்புறவு பாலர் பாடசாலை மாணவர்களின் (புதுவருடத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட) விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அவ்வேளையிலேயே தேரர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது.

சிறுவர்களுடைய திறமைகளை நாம இன்று கண்டு களிக்கிறோம. மறைந்திருக்கும அவர்களுடைய திறமையை வெளிக் கொணரவே இவ்விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன.

சிறுவர்களின் ஆற்றலை மேலும விருத்தி செய்ய உலக நாடுகள் அனைத்தும ஒன்று சேர்ந்து இவர்களுக்கென ஒலிமபிக் போட்டிகளை நடத்த முன்வர வேண்டும. இவ்வாறு அவர் கூறினார்.

போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு விபஸ்ஸி தேரர் பரிசில்களை வழங்கினார்.

(எ–ரி–ழ)

## விமான சேவைகள்

ஏப்ரல் 11 (புதன்கிழமை)

வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன், | | |
| 0725 | சிப்பல், பிராங்க்போர்ட் அபுதாபி | யூ எல் | 568 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 0825 | குவைத் | யூ எல் | 228 |
| 0905 | வியன்னா, மாலைதிவு, | எல் டி | 903 |
| 1030 | பிராங்க்போர்ட், மாலைதிவு | டி எப் | 3540 |
| 1040 | [illegible] டுபாய் | [illegible] | 581 |

## வானொலி

11—4—1990

பாடுபவர்– ஏ எம நியாஸ்

7–15 சமூகச் சித்திரம "ஊடுருவல்" பிரதி– திக்குவெல்லை ஸஃமி

7–25 தஜ்வீத் வகுப்பு நடத்துபவர்– மௌலவி எஸ் எம ஆரிப்

8–30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி அலஹாஜ் டி டி ஸல்டீன்

9–00 வர்த்தக சேவை

பகல் —

10–00 இசையமுதம

10–30 தவில் கச்சேரி வலங்கமான் சண்முகசுந்தரம்

9–10 அறிவிப்புகள்

9–20 பக்திப் பாடல்கள்

9–30 புனித வியாழன் கத்தோலிக்க சிறப்பு நிகழ்

0–00 வசந்தன் கூத்து

11–00 ஒலிபரப்பு முடிவு

ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பரிசளிப்புக் குழுத் தலைவரைத் தொடர்பு கொண்டு பெ__றுக் கொள்ளுமாறு கேட்கப்ப__ள்ளது.

போட்டி முடிவு தினம் எதிர் வரும் 20ஆம திகதியாகும்

(எ)

எரிக்கப்படும என்று கூறப்படுகிறது.

கடந்த ஜனவரியில் தென் ஆபிரிக்காவுக்கு மைக் கெட்டிங தலைமையில் விஜயம செய்த ஆங்கில கிரிக்கெட் அணிக்கு எதிராக தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை காங்கிரஸ் ஆர்ப்

தென ஆபிரிக்க கிரிக்கெட் அமைப்பை உருவாக்குவது தொடர்பாக இப்போது அந் நாட்டு டென்னிஸ் ஒன்றியத்து _ன் நடத்தப்பட்டு வரும பேச்சு வார்த்தைகள் மேற்படி அணியினரின் வருகையால் பாதிப்படைந் துள்ளது என்றும விளையாட்டுத்

யாட்டு வசதிகள் கிடையாது என்று சுட்டிக் காட்டியுள்ள இந்த அமைப்பு, கொல்ப் உட்பட பல்வேறு ஆட்டங்களைப் பேரிலும இனிமேல் தமது கவனத்தைத் திருப்ப விருப்பதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

(எ—032)

# விமான சேவைகள்

## ஏப்ரல் 11 (புதன்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன், கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்தா, தஹ்ரேன், றியாத் | எஸ் வீ | 346 |
| 0845 | டுபாய், மாலைதீவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1345 | மாலைதிவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1925 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 2005 | சிஙகப்பூர் | யூ எல் | 303 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0100 | அபுதாபி, பிராஙக் போர்ட், சிப்பல் | யூ எல் | 567 |
| | | யூ எல் | 523 |
| 0125 | டுபாய், சூரிச், பாரிஸ் | | |
| 0750 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 0915 | ஜித்தா, தஹ்ரேன், றியாத் | எஸ் வீ | 346 |
| 0930 | சிஙகப்பூர் | யூ எல் | 302 |
| 0950 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1215 | மாலைதீவு | யூ எல் | 121 |
| 1325 | பாஙகொக் | ரி ஜி | 307 |
| 1450 | மாலைதிவு, டுபாய் | ஈ கே | 803 |
| 1530 | மாலைதிவு | யூ எல் | 101 |
| 1545 | சென்னை | யூ எல் | 121 |
| 1755 | பம்பாய், கராச்சி | யூ எல் | 181 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன், சிப்பல் | கே எல் | 802 |
| 2055 | குவைத் | யூ எல் | 227 |
| 2155 | புக்கியோகா, நெரிடா | யூ எல் | 656 |

## ஏப்ரல் 12 (வியாழக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0525 | சூரிச், சார்ஜா, மாலைதீவு | பி பி | 602 |
| 0535 | கராச்சி, பமபாய் | யூ எல் | 182 |
| 0710 | பாரிஸ், சூரிச் டுபாய் | யூ எல் | 524 |
| 0725 | சிப்பல், பிராஙக்போர்ட் அபுதாபி | யூ எல் | 568 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 0825 | குவைத் | யூ எல் | 228 |
| 0905 | வியன்னா, மாலைதிவு, | எல் டி | 903 |
| 1030 | பிராஙக்போர்ட், மாலைதீவு | டி எப் | 3540 |
| 1040 | மோசாபியா, டுபாய், | எல் இசட் | 581 |
| 1055 | திருச்சி | யூ எல் | 132 |
| 1130 | ஹமபேர்க், டஸ்கம, பேர்க் | எல் ரி | 724 |
| 1140 | சென்னை திருவனந்த புரம | ஐ சி | 573 |
| 1355 | கராச்சி, | பி கே | 776 |
| 1415 | மாஸ்கோ, டுபாய் | எஸ் யூ | 545 |
| 1500 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 507 |
| 1530 | சென்னை | யூ எல் | 122 |
| 1610 | மாலைதிவு, | யூ எல் | 102 |
| 1800 | திருச்சி, சென்னை | ஐ சி | 577 |
| 2005 | நெரிடா, புக்கியோக்கா | யூ எல் | 457 |
| 2355 | ஹொஙகொங பாஙகொக் | யூ எல் | 423 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 503 |
| 0625 | சூரிச், சார்ஜா, மாலைதிவு | பி பி | 602 |
| 0805 | திருச்சி | யூ எல் | 131 |
| 0845 | பாஙகொக், ஹொஙகொங | யூ எல் | 622 |
| 0915 | டுபாய் | ஈ கே | 800 |
| 1030 | வியன்னா, மாலதிவு; | எல் டி | 903 |
| 1145 | பிராஙக்போர்ட், மாலைதிவு | டி எப் | 3540 |
| 1200 | சென்னை | யூ எல் | 121 |
| 1215 | மாலைதிவு | யூ எல் | 101 |
| 1315 | ஹமபேர்க், டஸ்கம பேர்க் | எல் ரி | 725 |
| 1235 | சென்னை, திருவனந்த புரம | ஐ சி | 508 |
| 1505 | கராச்சி, மாலைதிவு | பி கே | 776 |
| 1615 | மாஸ்கோ, டுபாய் | எஸ் யூ | 545 |
| 1540 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 578 |
| 1820 | தஹ்ரேன் | யூ எல் | 261 |
| 1840 | திருச்சி, சென்னை | ஐ சி | 574 |

குறிப்பு- யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ், கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, இஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ், டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே — பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

# வானொலி

## 11—4—1990

அதிகாலை
2-45 ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை - விஷ்ணு சகஸ்ரநாமம
5-30 பாமாலை - திருப்பாசுரம
5-45 சைவநற்சிந்தனை
5-55 இஸ்லாமிய நற்சிந்தனை வழஙகுபவர்- மௌலவி எம சி எம இக்பால்
5-55 போதிமாதவனின் போதனைகள்
6-00 வர்த்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-45 மாகாணச் செய்திகள்,
7-50 வர்த்தகசேவை
8-00 வயலின் ரி என் கிருஷ்ணன்,
8-15 மெல்லிசைப்பாடல்கள்.
8-30 நெஞ்சோடு நெஞ்சம

மாதர் மஜ்லிஸ் பிரதி- சுலைமா ஏ சமி
9-00 வர்த்தகசேவை

பகல்
10-00 இசையமுதம
10-30 கிளாரினட் ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்,
11-00 புல்லாஙகுழல் என் ரமணி
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி
6-30 அருளமுதம
6-45 மெல்லிசைப் பாடல்கள்
7-00 இஸ்லாமிய கீதம
பாடுபவர்- ஏ எம நியாஸ்
7-15 சமூகச் சித்திரம "ஊடுருவல்" பிரதி- திக்குவெல்லை ஸஃமி
7-25 தஜ்வீத் வகுப்பு நடத்துபவர்- மௌலவி எஸ் எம ஆரிப்
7-39 இஷாத் தொழுகைக் கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு
8-00 கிறிஸ்தவ புனித வார சிறப்பு நிகழ்ச்சி
8-15 கதமபம - நகைச்சுவை நாடகஙகள்
8-45 புதவருட விவசாய நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலைப்பூஙகா - நடத்துபவர்- சற்சொரூபவதி
10-00 இசைக் கச்சேரி ராஜலக்ஷ்மி நந்தகுமார்
10-45 பஜன் எம எஸ் சுப்புலக்ஷ்மி
11-00 ஒலிபரப்பு முடிவு.

## 12—4—1990

அதிகாலை
2-45 —ஹர் விசேட நிகழ்ச்சி

காலை
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை பார்த்தசாரதி சுப்ரபாதம
5-30 சாயிபஜன்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை, மௌலவி எம சி எம இக்பால்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 லயவிந்யாசம ரி இரத்தினம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி அலஹாஜ் டி டி ஸல்டீன்
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 தவில் கச்சேரி வலஙகமான் சண்முகசுந்தரம
10-45 கிறிஸ்தவ புனித வியாழன் சிறப்பு நிகழ்ச்சி
11-00 வயலின டாக்டர் என் சஙகர், வைத்தியநாதன், எல் சுப்பிரமணியம,
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் நிகழ்ச்சி
6-30 இந்து சமயப் பேச்சு புத்தாண்டை வரவேற்போம தமிழ்ப்பம கணபதிப் பிள்ளை ;
6-45 பாவளம நடத்துபவர் சில்லையூர், செல்வராஜன்
7-00 திருககுர்ஆன் விளக்கம வழஙகுபவர் மௌலவி எம ஆர் எம நிஸாம அவர்கள்,
7-15 மணிமொழிகள் வழஙகுபவர் மௌலவி எம பி எம நஸீர்
7-25 தத்துவவித்துக்கள் தொடர்ப்பேச்சு வழஙகுபவர் கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
7-35 தஜவீத குறிவினாவிடை பரிசு நிகழ்ச்சி
7-39 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்,
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு
8-00 வளரும பயிர் நடத்துபவர் வனஜா ஸ்ரீநிவாசன்
8-15 கிராம சஞ்சிகை வி ஏ சிவஞானம
8-45 புதுவருடப் பேச்சு சிதமபரநாதக் குருக்கள்
9-00 செய்திகள்,
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 புனித வியாழன் கத்தோலிக்க சிறப்பு நிகழ்
0-00 வசந்தன் கூத்து
11-00 ஒலிபரப்பு முடிவு

# டெலிவிஷன்

## 11—4—1990

### ரூபவாஹினி

[விசேட நிகழ்ச்சி]
பி ப
4-30 மனிதனும இயந்திரமும (கல்வி விவரணம)
5-00 செய்திகள் - சிஙகளம
5-15 சரமீர
5-30 இளைஞர் அரஙகம
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 உரை நிகழ்ச்சி
6-30 செய்திகள் - தமிழ்
7-00 எதிரொலி
7-30 டார்ஸான்
8-00 செய்திகள் - சிஙகளம
8-30 ஜிலற் வேர்ல்ட் கப் (விசேடம)
9-00 சமபத் ரேகா
9-30 செய்திகள் - ஆஙகிலம
10-00 தரு வைலற் சோனர்
11-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 டெக்னிஷெல் பே
6-30 செய்திகள் - சிஙகளம
6-40 தேசிய புதுவருடத்தியதார்த்தம
6-45 சித்திர கீதா
7-30 டேன்ஜர் பே
8-00 வெரயிட்டி வெரயிட்டி
8-25 செவன திரும புவக்
8-55 தோப்பிக் கடே
9-30 மிஷன் இமபொசிபள்
10-00 செய்திகள் - ஆஙகிலம
10-25 ப்ரோகிராம பரேட்
10-26 மிஷன் இமபொசிபள் (தொடர்ச்சி)
10-45 ஒளிபரப்பு முடிவு

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


## சகல பாடசாலைகளுக்கும் நிர்வாகக் கமிட்டிகள்

கொழும்பு, ஏப் 10

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் உடனடியாக பாடசாலை நிர்வாக கமிட்டிகள் அமைக்கப்படும்—

இதற்கான உத்தரவை கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி பிறப்பித்திருக்கிறார்—

பிரஸ்தாப கமிட்டியின் தலைவராக பாடசாலை அதிபரே இருப்பார்—

ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் தலா மூவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 10 பேரைக் கொண்ட கமிட்டியாக இது இயங்கும்—

பாடசாலை சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களும் இந்த கமிட்டியின் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்படும்—

பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல், நிதி சேகரிப்பு, கட்டிடம் அமைத்தல் உட்பட சகல அலுவல்களும் இந்த கமிட்டியின் அங்கீகாரத்தின் பின்னரே செயல்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

பாடசாலை நிர்வாக கமிட்டிகள் அமைக்கப்பட்ட பின்னர் அநீதி, மோசடி போன்றவை பாடசாலைகளில் இடம் பெறுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்—

(ண—மு)

# இலங்கை உறவு மீளாய்வு செய்ய சிங் பணிப்பு

கொழும்பு, ஏப் 10

இலங்கையுடனான நல்லுறவுகள் தொடர்பாக மீளாய்வு செய்து, அதற்கேற்ப உரிய செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் திரு வி பி சிங் இந்திய வெளிவிவகார அமைச்சரைப் பணித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப் படையினர் முற்றாக வாபஸ் பெறப்பட்டு விட்ட இந்த நிலையிலேயே இந்தியப் பிரதமர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்திய அமைதிப்படையினர் வாபஸ் பெறப்படுவதற்கு முன்னரும், வாபஸ் பெறப்பட்ட பின்னரும் இந்திய அரசின் செயல்பாட்டில் பாரிய வித்தியாசம் ஏற்படலாம்.

சென்னையில் இருந்து வெளிவரும் ஹிந்துவுக்கு டில்லியிலிருந்து கே கே கட்யால் எழுதி உள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய நட்புறவு உடன்படிக்கை தொடர்பாக இலங்கை ஜனாதிபதியினால் முன் வைக்கப்பட்டுள்ள முக்கிய காரணங்கள் பற்றியும் தீவிரமாக பரிசீலிக்கப்படுகின்றது.

இதேவேளை 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையை அப்படியே நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா கருதும் அதேவேளை இந்த ஒப்பந்தத்தின் இணைப்புகளாக சேர்க்கப்பட்ட இலங்கை, இந்திய தலைவர்களுக்கிடையிலான கடிதக் கோவைகளை தனியான ஒரு உடன்படிக்கையாக செய்து கொள்ளவும் இந்தியா தயாராக இருக்கிறது.

1987 ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தவோ, அல்லது புறக்கணிக்கவோ முற்பட்டால், ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு, கடல் எல்லை, மற்றும் நாடற்றோர் பிரச்சினை தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் இந்தியா இலங்கையின் வழியில் அணுகவும் இடமுண்டு, என்றும் கே கே கட்யால் அந்த செய்தியில் சுட்டிக் காட்டி உள்ளார்.

இதேவேளை இப்பொழுது இலங்கை அகதிகள் பிரச்சினையும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இலங்கையில் இருந்து இந்தியப் படையினர் வெளியேறிய பின் இங்குள்ள தமிழர்கள் அனைவரையும் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை அரசினுடையதே.

எனினும் இப்பொழுது 4000 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இங்குள்ளனர். ஒரிஸாவில் தங்கி இருக்கும் இவர்கள் பிரச்சினை மனிதாபிமான ரீதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் கேரளாவுக்கு அனுப்பப்படுவார்கள் என்ற செய்தியில் எந்த உண்மையும் இல்லை, என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா எப்பொழுதும் நல்லுறவு ஒப்பந்தத்தை செய்து கொள்ள தயாராகவே இருக்கின்றது.

ஆனால் அதனை சாத்தியப் படுத்துவதும் துரிதப்படுத்துவதும் இலங்கை அரசின் கைகளிலேயே தங்கி உள்ளது.

இரண்டு மாதங்களின் முன் இந்த நட்புறவு ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் அறிக்கை இந்தியா இலங்கையை வற்புறுத்துவது போலவும், பலவந்தப்படுத்துவது போலவும் அமைந்துள்ளது. என்று இலங்கைத் தரப்பில் கூறப்பட்டது. எனவே இப்போது இலங்கையே அடுத்த ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்றும் கட்யால் அந்த செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

(ல—ய)




## அமைச்சர் தொண்டமானுக்கு பாராட்டு விழா

இ தொ கா தலைவரும், அமைச்சருமான திரு எஸ் தொண்டமானின் 50 வருட மக்கள் சேவையைப் பாராட்டி கலைஞர்களால் கடந்த வெள்ளியன்று தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடத்தப்பட்ட விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

திரு தொண்டமான் உரையாற்றிக் கொண்டிருப்பதையும், அதிதிகளாகக் கலந்து கொண்ட கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன், இந்தியத் தூதுவர் திரு எல் மெஹ்ரோத்ரா, ராஜாங்க அமைச்சர் திரு எம் எஸ் செல்லச்சாமி, பிரதி சபாநாயகர் திரு காமினி பொன்சேக்கா, தகவல்துறை ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க, இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் ஆகியோரையும், சிரேஷ்ட ஒலிபரப்பாளர் திரு கே பரராஜசிங்கம் திரு தொண்டமானுக்கு பொன்னாடை போர்த்துவதையும் படங்களில் காணலாம்.

(ல—ழ)

(படம்— தம்மிக நிமலசூரிய)

## சமய நிகழ்ச்சிகள்

### மஸ்கெலியா மெக்கா தோட்ட கும்பாபிஷேகம்

கொழும்பு, ஏப் 10

மஸ்கெலியா, மெக்கா தோட்டம் மேல் பிரிவு ஸ்ரீ கருமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று 11 ஆம் திகதி நடைபெறும்—

கடந்த 7 ஆம் திகதி கணபதி ஹோமத்துடன் ஆரம்பமான கும்பாபிஷேக கிரியைகள் இன்று மகா கும்பாபிஷேகத்துடன் நிறைவு பெறும்—

அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேக பூஜைகள் ஆரம்பமாகும்—

இன்றைய தினம் யாக பூஜைகள் ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை, மகேஸ்வர பூஜை என்பனவும் நடைபெறும்—

கும்பாபிஷேக கிரியைகளை பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ இ ஸ்ரீதரக் குருக்கள் நடத்தி வைப்பார்—

பிரதம அதிதிகளாக இந்து சமய இந்து கலாசார அமைச்சர், திரு பி பி தேவராஜ், திரு எம் எஸ் செல்லச்சாமி, திரு காமினி திஸாநாயக்கா உட்பட மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்—

(ந—ழ)

## தென் மா. சபை நிர்வாகத்தின் கீழுள்ள 50 ஆஸ்பத்திரிகளில்

உறுப்பினர்களும், அமைச் ... திய கூட்டத்தின் பின் எதிர்

# 50 ஆஸ்பத்திரிகளில் சுகாதார சேவை பாதிப்பு

கொழுமபு, ஏப் 10

தென் மாகாண சபையின் நிர்வாகத்தில் உள்ள 50க்கும மேற்பட்ட ஆஸ்பத்திரிகளின் சுகாதார சேவை பாதிப்புற்றுள்ளது.

போதுமான அளவு நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படாமையே இதற்குக் காரணமாகும.

இந்நிலைமை காரணமாக ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை வாஙகுதல், 5 ஆயிரத்துக்கும மேற்பட்ட ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு வழஙகப்பட வேண்டிய "ஓவர் டைம" சமபளம, அலவன்ஸ் கொடுப்பனவுகள், கடன் வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் பிரச்சினை உருவாகி உள்ளது.

அமபாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டஙகளை உள்ளடக்கிய தென் மாகாண சபையின் 50 ஆஸ்பத்திரிகளின் நிர்வாகப் பணிகளுக்கு 15 கோடியே 40 லட்சம ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை தென் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திரு ஜீ ஹேவாவிதாரண தெரிவித்தார்.

இந்த நிதியில் 12 கோடியே 40 லட்சம ரூபா ஊழியர்களின் சமபளத்துக்கு மாத்திரமே செலவாகிறது.

மற்றைய பணிகளுக்கு எஞ்சிய 3 கோடி ரூபா மட்டுமே செலவிடப்படுகிறது.

மதிப்பீட்டின் படி மருந்துப் பொருள்களுக்காக 4 கோடியே 60 லட்சம ரூபா தேவைப்படுகிறது.

ஊழியர் ஓவர் டைம மற்றும அலவன்ஸ், ஆறு மாத சமபளக் கடன் போன்றவற்றுக்குத் தேவையான நிதியைப் பெறுவது பெரும பிரச்சினையாக இருக்கிறது.

இதனால் மேலதிகமாக 10 கோடி ரூபாவை திறைசேரியிடம கோரி இருப்பதாக திரு ஹேவவிதாரண கூறினார்.

நிதிப் பிரச்சினை உக்கிரம அடைந்த போதும ஊழியரின் பண்டிகை முற்பணமான 1500 ரூபாவைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும செயலாளர் மேலும தெரிவித்தார். (ல-007)

# அரசு பாதுகாப்பை உறுதிப்படுத்தினால்

## மா. சபை கூட்டம் நடத்த தயார்

## ஈ. பி. ஆர். எல். எப். அபு யூசுப்

கொழுமபு, ஏப் 10

அரசாஙகம ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமானால் வடக்கு – கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தை நடத்த நாம தயாராக இருக்கிறோம.

வடக்கு – கிழக்கு மாகாண போக்குவரத்து சாலைகள் தொழில்துறை, வலு அமைச்சர் ஜனாப் எம கே அபூ யூசுப் இப்படிக் கூறினார்.

நேற்று முன்தினம மாலை தாஜ் சமுத்திரா ஹோட்டலில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும கூறியதாவது—

இலஙகையின் தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்த அரசு எந்தவித நிபந்தனையும இன்றி ஈ பி ஆர் எல் எப் முன்வைத்த 19 அமசக் கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்படி இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரமபிக்க வேண்டும.

அரசு பேச்சுவார்த்தைக்கு இணஙகவில்லையானால் எதிர்காலத்தில் நாட்டில் பயஙகர நிலைமைகள் உருவாகக் கூடிய வாய்ப்பு ஏற்படலாம.

இதை அரசாஙகத்துக்கு மட்டுமன்றி எல்லா அரசியல் கட்சிகளுக்கும தெரிவிக்கின்றேன்.

ஈ பி ஆர் எல் எப் அஙகீகரிக்கப்பட்ட ஒரு கட்சி. மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு அரசாஙகம அமைத்தது. இலஙகை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஐக்கிய இலஙகையை உருவாக்கும எண்ணத்திலேயே அது அவ்வாறு அரசாஙகம அமைத்தது.

ஆனால் மாகாண சபை உறுப்பினர்களும, அமைச்சர்களும கடமையை சரிவரச் செய்யும வகையில் அரசு அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறி விட்டது.

இப்படி அவர் சொன்னார்.

ஜனாப் அபூ யூசுப்படன் ஈ பி ஆர் எல் எப் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சாம தமபிமுத்துவும இருந்தார்.

அவர் மேலும தெரிவித்ததாவது—

முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் உட்பட அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும பாதுகாப்பு இன்மையால் தஙகளுடைய வீடு வாசல்களை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது.

ஆயுதஙகளை கீழே வைத்து விட்டே புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் இறஙக வேண்டும. ஆனால் அவர்கள் ஆயுதஙகளை கீழே வைக்க விருமபவில்லை.

இன்று புலிகளிடம ஆயுதஙகளை கீழே வைக்குமபடி அரசாஙகம மிகவும பணிவாகக் கேட்க வேண்டி இருக்கிறது.

வடக்கு – கிழக்கு மாகாண சபை இன்று இயஙகாமல் இருப்பதற்குக் காரணம அரசாஙகத்தின் அக்கறையின்மையே.

அரசு பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் வடக்கு – கிழக்கு முதலமைச்சர் உட்பட அனைத்து உறுப்பினர்களும இருப்பார்கள்.

வடக்கு – கிழக்கு மாகாண சபையை கலைக்க அரசாஙகத்திற்கு அதிகாரமோ, சட்டமோ கிடையாது. 3 மாதஙகளுக்கு ஒருமுறை கூட்டம கூட்டப்படாவிட்டால்தான் கலைக்க முடியும.

கடந்த மார்ச் மாதம நடத்திய கூட்டத்தின் பின் எதிர் வரும ஜூன் மாதம நாம வடக்கு – கிழக்கு மாகாண சபை கூட்டத்தை நடத்துவோம.

வடக்கு – கிழக்கிற்கு சென்று கூட்டத்தை நடத்த விருமபுகிறோம. அஙகு நடத்த முடியாமல் போகுமேயானால் கொழுமபிலாவது திட்டமிட்டபடி கூட்டத்தை நடத்துவோம.

வடக்கு – கிழக்கு மாகாண சபை அலுவல்களை நடத்த ஒரு சூழ்நிலையையும பாதுகாப்பையும பெற்றுத் தருமபடி வடக்கு – கிழக்கு ஆளுநர் நளின் செனவிரத்னவை இன்று (புதன் கிழமை) சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளோம.

போட்டிக் குழுக்களிடம இருந்து தஙகளைப் பாதுகாத்துக் கொள்ளவே புலிகள் ஆயுதஙகளை வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதுவல்ல உண்மை. அவர்கள் ஆயுதஙகளை கீழே வைக்க விருமபவில்லை.

நாம ஒதுஙகி இருப்பது பயத்தினால் அல்ல, பாதுகாப்பின்மையினாலேயே.

அப்படியானால் ஜனநாயகம செயல்படுவது எப்படி?

வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரஙகள் வழஙகப்படாததாலேயே மாகாண அரசை கன்னிச்சையாக பிரகடனப்படுத்தி உள்ளோம. சகல அதிகாரஙகளும வழஙகப்படுமானால் ஈழம கோரிக்கையை கைவிடுவதாகவும கூறி இருந்தோம.

எமது அரசியல் நடவடிக்கைகளை இயஙக வைக்க எமமால் முடிந்த நடவடிக்கைகளை எடுப்போம.

இப்படி அவர் சொன்னார்- (ல-ழ)

# இலங்கை அகதிகளை கேரள அரசு ஏற்காது

கொழுமபு, ஏப் 10

கேரள அரசு இலஙகை அகதிகளை ஒருபோதும ஏற்காது. ஆகக் கூடுதலான சன நெருக்கம ஏற்பட்டுள்ள இம மாநிலத்தில் மேலும இலஙகை அகதிகளையும ஏற்றுக் கொள்வதோ அல்லது அவர்களுக்குப் போதிய தஙகுமிடஙகளை ஏற்படுத்திக் கொடுப்பதோ நினைத்தும பார்க்க முடியாத ஒன்று.

இப்படி கூறி இருக்கிறார் கேரள மாநில முதல்வர் திரு ஈ கே நாயர்.

தற்பொழுது ஒரிஸ்ஸாவில் தஙகி இருக்கும இலஙகை தமிழ் அகதிகளை கேரளாவுக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக இந்து பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

இச்செய்தி தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது, இதைப் பற்றி எமக்கு எதுவுமே தெரியாது. எனினும இந்த முயற்சிக்கு நாம கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கிறோம என்று முதல்வர் தே நாயர் உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றின் மூலம குறிப்பிட்டுள்ளார் என இந்து குறிப்பிட்டுள்ளது. (ல-ய)

# மலையகத்தில் வேலை திட்டம்: ஈரோஸ் முக்கியத்துவம்

கொழுமபு, ஏப் 10

இலஙகையில் தமிழ் பேசும மக்கள் என்ற பொதுவான அடிப்படையில் மாத்திரமன்றி மலையக மக்கள் சார்ந்த தனித்துவமான அமசஙகளுக்கு கூடுதல் முக்கியத்துவம வழஙக இருப்பதுடன், ஜனநாயக தன்மை கொண்ட செயல் திட்டஙகளில் கூடுதல் அக்கறை காட்டவும ஈழவர் ஜனநாயக முன்னணி முடிவு செய்துள்ளது.

மலையக மக்கள் தமது பாரமபரிய பெருந்தோட்ட தொழில் துறையை மட்டும நமபிக் கொண்டிராமல் இலஙகையில் ஏனைய சமூகஙகளைப் போல் சகல துறைகளிலும தமமை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய வரலாற்று நியதிக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு ஈழவர் ஜனநாயக முன்னணி தமது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவு நிதியில் பன்னிரண்டு லட்ச ரூபாவை நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்கென வழஙகியுள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது. (ல)

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் 5குணசேன மாவத்தை கொழுமபு 12 இலஙகை- தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 11 ஏப்ரல் 1990

DINAPATHI 5, Gunasena Mawatha, Colombo — 12

P. O Box 1613